# கலைச் செல்வி



மார்ச் பங்குனி, 1960.  25 சதம்

# மக்கள் வைத்தியசாலை

கே. கே. எஸ். வீதி. சுன்னுகம்

ஸ்தாபிதம் 28-11-58

மக்கள் நன்மையையும் வசதியையும் சுகாதார வாழ்க்கையையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த வைத்தியசாலை இதுவே

தினந்தோறும் திறக்கப்படும் நேரம்
காலை 7-30 தொடக்கம் மாலை 9 மணி வரை

உயர்தர சிகிச்சை பெற உதவுமிடம்
மக்கள் வைத்தியசாலையே

WE POSSESS ALL LATEST PATENT MEDICINES FOR SALE

SERVICE AVAILABLE DAY AND NIGHT
OUR MOTTO IS SERVICE

# PEOPLE'S DISPENSARY

## CHUNNAKAM

*MANAGING PROPRITER:- Mr. K. S. KANDIAH*

போன்: 281 தந்தி: "ஜுவெல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள்
அழகிற் சிறந்த ஆபரணங்கள்

யாவற்றிற்கும்

ஈழத்திருநாட்டில்
இணையற்ற ஸ்தாபனம்

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்

நம்பிக்கை! நாணயம்! நயம்!
உத்தரவாதம்!

பெற்ற நகைகளை 32 வருடங்களாகச் செய்தளித்து
அமோக ஆதரவுபெற்ற
இலங்கை இந்தியாவின்
மிகப்பெரிய நகை வைர வியாபாரிகள்

## எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்

ஏ. கே. எஸ். அன் சன் ஸ்

போன்.

519

*

உங்கள்
அபிமானத்திற்கும்
அன்பிற்கும்
உரிய

நகை
வைர வியாபாரிகள்

நகை மாளிகை

63, 65, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்

# கலைச் செல்வி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். --பாரதியார்.

கலை: 2 { விஹாரி—மாசி 1960 பெப்பிரவரி—மார்ச் } காட்சி: 3

# வான் புகழ் வள்ளுவர்

கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்திய கவிஞர் திலகத்திற்கு உரிய கௌரவம் அளிக்கப்பட்டுவிட்டது. ஈரடியால் உலகளந்த இணையற்ற மகாகவிக்கு ஒப்பற்ற மதிப்பளித்து இமயப் பெருமை அடைந்துவிட்டது இந்திய அரசாங்கம். தரணி சிறக்கத் தமிழிற் பாடிய தவப் புலவன் தபால் தலையில் தனியிடம் பெற்றுவிட்டார்.

'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்' என்றார் பாரதியார். அதனாற்றான் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கீந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு.

வள்ளுவன் வாசகத்தை வாழ்க்கையிலே கடைப்பிடித்தால், வறுமை வாட்டாது; வஞ்சகம் தலை காட்டாது; போர்க்குரல் ஒலிக்காது; போட்டியும் பொறாமையும் நிலைக்காது.

உன்னதமான இக் கருத்துக்களை உள்ளடக்கிய உலக மகா கவிஞன் உலாவரப்போகின்றான்.

ஏற்கனவே தெரிந்தவர்கள் தம் நினைவை மீட்டுவார்கள்; எதுவுமே தெரியாதவர்கள் தம் அறிவைக் கூட்டுவார்கள்;

நல்ல காரியத்தை எல்லோருமே செய்யலாம்.

இந்தியாவைப் பின்பற்றி நமது இலங்கை அரசாங்கமும் தனது கௌரவத்தை உயர்த்திக் கொள்ளட்டும்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். 'வாழ்க வகுப்புவாதம்' என்ற தலையங்கத்தைப் படித்து விட்டுப் பாராட்டிப் பலரும் கண்டித்துச் சிலரும் எழுதியுள்ளனர். அனை வர்க்கும் நன்றி. இலங்கை மக்களிடையே ஒற்றுமை மிக மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற இந்த நேரத்திலே இப்படியான 'துவேஷக்' கருத்துக்கள் கூடாது என்பதைக் 'கண்டிப்புக்' கடிதங்கள் காட்டுகின்றன. 'தமிழன், தான் தமிழன்' என்பதை மறந்துவிடக்கூடாது என்று நாம் சொல்வது எவ்வாறு "துவேஷப் பிரசாரமாகும்"? பாரதியார், திரு. வி. க, டாக்டர் மு. வ. முதலிய பெரியோர்சள் கூறிய கருத்தைத்தானே நாமும் கூறினேம்! திறந்த உள்ளத்துடனும் பொறுமையுடனும் அத்தலையங்கத்தை மீண்டும் படித்தலால், நமது கருத்து ஒற்றுமைக்கு வித்திடுமே தவிர, வேற்றுமைக்கு வழிவகுக்காது என்பதை இலகுவில் உணரலாம்.

அடுத்த இதழ் சித்திரை மலராகச் சிறப்புடன் வெளிவருகின்றது. பாரதிக்குப் பின், அண்ணுமலை நகரில் ஆகிய தொடர் கட்டுரைகள் மலரிலேயே ஆரம்பமாகின்றன. பிரபல எழுத்தாளர்கள் சொக்கன், இளங்கீரன், அ. ந. கந்தசாமி, அ. செ. முருகானந்தன், வரதர் முதலியோரது புதுமைப் படையல்கள் எமது இவ்வாண்டின் இலக்கிய விருந்திற்குள் அடங்கும்.

வணக்கம்.

—ஆசிரியர்

*|*

# கலைச்செல்வி

## மகளிர் மலர்.

ஈழநாட்டிலுள்ள பெண் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக 'மகளிர் மலர் வெளியாகின்றது.

இப்பொழுது பிரபலமடைந்துள்ள பெண்எழுத்தாளர்களும் புதிய பல எழுத்தாளர்களும் எழுதுகின்றனர்.

இவ் விசேட மமருக்குக் கதைகள், கட்டுரைகள் அனுப்புவோர், 'பாஸ்போட்' அளவில் தங்கள் புகைப்படங்களையும் அனுப்பக் கோருகின்ருேம்.

கடைசித் திகதி: 25-3-60

கலைச்செல்வி.

கந்தரோடை சுன்னுகம்.

''வாழ்வளித்த தெய்வம்'' என்ற இந்தக் கதையின் மூலம் எழுத்துலகில் இறங்கும் ''வதனி'' யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரியொன்றில் கல்வி பயில்பவர். அன்பு அழியாது என்ற அருமையான கருத்து; அழகான நடை- இவற்றைக் கதையில் காணலாம்.

# வாழ்வு அளித்த தெய்வம்

வதனி

''அம்மா! அம்மா! அப்பா வந்திட்டாரம்மா,'' என்று தனக்கே உரிய இனிய மழலை மொழியில் கூறிக்கொண்டே தாயை நோக்கி ஓடிவந்தான் மாலாவின் செல்வப் புதல்வன் ரவி. அவனை வாரியணைத்துத் தூக்கியபடியே வாசலுக்கு விரைந்து வந்தாள் அவள். கார்ச் சாவியைக் கையில் வைத்துச் சுழற்றியபடியே புன்முறுவலுடன் வந்து கொண்டிருந்தார் ரவியின் அப்பா. அவரின் கையிலிருந்த சாவி மாலாவின் கைக்குள் வருவதற்கு முன்பு தன் தந்தையின் அன்புப் பிடிக்குள் சென்றுவிட்டான் ரவி.

மாலா அவர்களை விட்டு விட்டு சமையலறைக்குச் சென்று தந்தைக்கும் மகனுக்கும் காப்பி போட்டுக் கொண்டு வந்தாள். காப்பியைக் கையில் வாங்கியபடியே மாலாவை அன்புடன் நோக்கினர். அவரின் அன்புப் பார்வையைத் தாங்க இயலாது வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

''மாலா''

''ம்''

''காருக்குள் பார்சல் ஒன்று இருக்கின்றது எடுத்து வருவாயா'' அவர் சொல்லி முடிப்பதற்கிடையில் மாலா ஓடிச்சென்று அப் பார்சலை எடுத்து வந்து நீட்டினுள். பார்சலுடன், நீட்டிய அவள் கரங்களையும் சேர்த்துப் பிடித்து தன் அருகிலேயே மாலாவை அமர வைத்தார்.

''மாலா இதற்குள் என்ன இருக்கின்றது என்று சொல் பார்ப்போம்''.

''நீங்கள் சொல்லாவிடில் எனக்கெப்படித் தெரியும்'' என்ருள் மாலா. அவர் சிரித்தபடியே பார்சலைப் பிரித்தார். அவளுக்குப் பிடித்த நீல நிறத்தில் அழகான ஒரு காஷ்மீர் சேலையும் அதற்குப் பொருத்தமான ஒரு 'சோளி' துண்டும், குழந்தை ரவிக்குப் பட்டுத் துணிகளும் இருந்தன.

''நீங்கள் உங்களுக்கென்று ஒன்றும் எடுக்கவில்லையா அத்தான்?''

''அதெல்லாம் ஆறுதலாக எடுக்கலாம். இந்த அழகிய சேலையை அணிந்து அப்ஸரஸ் போல் நீ பூரிப்பதைப் பார்த்து நான் பெருமைப் பட வேண்டும் மாலா!'' என்று சொல்லி, சேலையை எடுத்து மாலாவின் மேலே வைத்து, நீ இந்தச் சேலையை அணிந்தால் யாரைப் போன்று இருப்பாய் தெரியுமா?'' என்ருர்.

'எதை அணிந்தாலும் சந்தேகமில்லாமல் உங்கள் மனைவியைப் போன்றே இருப்பேன்'' என்ருள் மாலா.

"குறும்புக்காரி" என்று கூறி மாலாவின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினர் அவள் ஆசை அத்தான். அத்தானின் பரந்த மார்பிலே சாய்ந்தாள் மாலா. அவள் எண்ணமெல்லாம் பின்னேக்கிச் சென்றது.

சண்முகம் ஓர் ஏழை விவசாயி. அவன் விவாகஞ் செய்த இரண்டாவது வருடமே தன் அன்பு மனைவியை இழந்தான். கண்ணம்மா (அதுதான் அவன் மனைவி பெயர்) கண்ணை மூடும் பொழுது சண்முகத்திடம் ஒரு வயது நிரம்பிய பால் மணம் மாருப் பாலகி ஒருத்தியை தன் அன்புக் காணிக்கையாக விட்டுச் சென்ருள். மனைவியின் பிரிவை தன் அருமை மகள் மாலாவின் மூலமாக சண்முகத்தால் ஓரளவு மறக்க முடிந்தது.

தாயையே அறியாத மாலா தந்தையே சகலதுமென்றெண்ணி அவர் சொல் தட்டாது நடந்து வத்தாள். அவள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. விரைவிலேயே படித்து எஸ். எஸ். சி. பரீட்சை தேறினள். தன் தந்தை தனக்காகப் படும் கஷ்டங்களை உணர்ந்தாள். டைப் அடிக்கக் கற்றுக் கொண்டாள். மேலும் படிக்க வேண்டுமென்ற ஆசையிருந்தும் தந்தையை இன்னும் கஷ்டப்படுத்த அவள் விரும்பவில்லை.

பல இடங்களில் வேலைக்கு மனுப் போட்டாள். பயன் கிடைக்கவில்லை. மாலாவின் நம்பிக்கை தளர்வுற்றது. கடைசியில் ஒருநாள் 'பெண் டைப்பிஸ்ட் தேவை' என்ற விளம்பரத்துக்கு மனுப்போட்டாள். பதிலும் வந்தது. அவள் மனம் மகிழ்ந்தாள். தந்தையிடம் சென்று இந்நற்செய்தியைக் கூறினள். தந்தையாருக்கு அவள் வேலைக்குப் போவதில் விருப்பமில்லை. ஆனல் மாலாவோ பிடிவாதமாக, தன் அன்பான பேச்சினல் தந்தையின் அனுமதியைப்

கடிதத்தில் குறிப்பிட்டபடி அடுத்த நாளே அந்த விலாசமுள்ள காரியாலயத்திற்குச் சென்ருள். அங்கு அவளைப்போன்ற இன்னும் ஆறு பெண்கள் வந்திருந்தனர். எல்லோரையும் கூப்பிட்டு முடிந்ததும் கடைசியாக நின்ற மாலா கூப்பிடப்பட்டாள். மாலா அவநம்பிக்கையுடனே மனேஜரின் அறையினுள் நுழைந்தாள். குனிந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்த மனேஜர் ஸ்ரீதர் நிமிர்ந்தார். அவள் எதிர்பார்த்தபடி மனேஜர் வயது சென்றவராக இல்லை. அவர் தோற்றத்திலிருந்து இருபத்தைந்து வயதிற்கு அப்பாற்படாதவர் என்பது தெரிந்தது. அவரின் களை பொருந்திய அழகிய வட்டவடிவமான முகத்தை நெற்றியில் விழுந்து புரண்டு சுருண்ட கேசங்கள் அலங்கரித்தன. அதை அலட்சியமாகத் தள்ளியபடியே அவளை விழுங்கி விடுபவர் போல் நோக்கினர். அவர் பார்வையில் பண்பு தெரிந்தது. ஸ்ரீதரின் பார்வையைத் தாங்கமுடியாத மாலா நாணித் தலை குனிந்தாள்.

சிறிதுநேரம் அவ்விடத்தில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைத்துக்கொண்டு பேசினர் ஸ்ரீதர்.

"உங்கள் பெயர்?"

"மாலா"

"வயது?"

"பதினெட்டு"

"படிப்பு?"

"எஸ். எஸ். சி. பாஸ் பண்ணிவிட்டுத்தான் 'டைப்' அடிக்கக் கற்றுக் கொண்டேன். நிமிடத்திற்கு நாற்பது சொற்கள் அடிக்க முடியும்." வேறும் இன்னும்பல கேள்விகள் எல்லாம் கேட்டார். எல்லாவற்றிற்கும் குனிந்த தலையுடனேயே பதில் கொ

என்று மனேஜர் கூறியதும் தலை நிமிர்ந்தாள். ஸ்ரீதரின் குறும்பு துள்ளும் விழிகளைச் சந்தித்தாள். ஒரு கணப் பொழுதில் அவள் உடலெங்கணும் ஏதோ ஒருவித உணர்ச்சி பரவியது.

மாலா சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீதர். அவளின் மதி முகமும், கயல் விழியும், அடக்கமான அன்பான பார்வையும், உதட்டில் தவழும் புன்னகையும் அவன் இதயத்தில் அப்படியே பதிந்து விட்டன. ஏதோ ஒன்றை இழந்தவன்போலத் தவித்தான் ஸ்ரீதர்.

மாலாவாலும் ஸ்ரீதரை மறக்க முடியவில்லை, அவரின் அன்பான ஆதரவான பேச்சு அவளைக் கவர்ந்தது. வேலை அவளுக்கே கிடைத்தது. என்றுமில்லா மகிழ்ச்சியுடன் துள்ளும் இதயத்தை அடக்கியபடியே தந்தையிடம் விடை பெற்றுக்கொண்டு காரியாலயம் வந்து சேர்ந்தாள் மாலா. ஸ்ரீதர் புன்முறுவலுடன் அவளை வரவேற்ருன். அவளின் வேலை யாவற்றையும் தெளிவாகக் கூறி அவளிடம் ஒப்படைத்தான்.

அங்கு அவளைவிட இன்னும் மூன்று பெண்மணிகள் உத்தியோகம் பார்த்து வந்தனர். மாலா அவர்களுடன் சரளமாகப் பழகிஞள். ஆனுல் அவர்களோ எல்லாவற்றிற்கும் முகத்தைச் சுளித்து வெறுப்பைக் காட்டினர். காரணம் தெரியாது தவித்தாள் அவள்.

நாள் தவருது காரியாலயத்திற்குச் சென்று தன் கடமைகளைத் திருப்திகரமாகச் செய்து விட்டுத் திரும்புவதில் ஓர் அலாதி பிரியம் மலாவுக்கு. மலா ஒரு நாள் வரத் தவறிஞலும் அன்று முழுவதும் ஸ்ரீதர் ஒரு வேலையும் செய்ய முடியாது திண்டாடுவான். அவர்கள் மாசற்ற அன்பு காதலாக மலர்ந்தது. அவர்கள் செய்கைகள் ஒவ்வொன்றையும் சந்தேகக்கண் கொண்டு நோக்கினர் காரியாலயத்திலுள்ளோர்.

ஸ்ரீதர் அந்நகரிலேயுள்ள பெரிய பணக்காரரான ஜகன்னுதன் என்பவரின் செல்வப் புதல்வன். அவனைப் பெற்ருேர் அடித்துப் பழக்கவில்லை. அன்பாகப் பழக்கிஞர்கள். பண்பை அவன் உள்ளத்திலே புகுத்திஞர்கள். ஸ்ரீதருடைய உத்தம குணத்திற்கேற்ப, அந்த உயர் பதவியும் அவனுக்குக் கிடைத்தது. அவனுக்கு விவாகஞ் செய்ய எண்ணிய பெற்ருேர்கள் தங்கள் அந்தஸ்துக்குச் சமானமான ஓரிடத்தில் பெண் கேட்டனர். அவர்கள் சம்மதித்தனர். ஆனுல் ஸ்ரீதர் மறுத்துவிட்டான். அவன் பெற்ருேரிடம் தன் உள்ளத்திலுள்ளவை யாவற்றையும் கூறிஞன். தந்தை சீறிஞர். தந்தையை எதிர்த்துப் பேசப் பழகாத, எதிர்த்துப்பேச விரும்பாத ஸ்ரீதர் இடிந்து போய் உட்கார்ந்தான். அவனுடைய ஆசைகள் அனைத்தும் சிதறி விட்டன. ஆசை மகனின் அவல நிலையைக் காணச் சகிக்காத தாய் அவனைத் தேற்றிஞள். மகனுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்படி தன் கணவரிடம் மன்ருடிஞள். அவர் எதற்கும் அசையவில்லை.

ஸ்ரீதரின் திருமண நாள் குறிக்கப்பட்டுவிட்டது. சோர்ந்த உள்ளத்துடனே காரியாலயத்திற்குச் சென்ருன். அவன் உள்ளப் போராட்டம் யாவும் முகத்திலே தெளிவாகத் தெரிந்தன. புன்முறுவலுடன் கூடிய அழகு முகத்தை எதிர்பார்த்த மாலா வாடிய மலர்போல் களையிழந்து காணப்பட்ட முகத்தைக் கண்டு திடுக்கிட்டாள். அவனை நெருங்கி "ஸ்ரீதர் ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றீர்கள்? உடம்பு சரியில்லையா?" என்று அன்புடன் கேட்டாள். அவள் அன்புச் சொற்கள் அவனை வேதனைப் படுத்தின. தலையை நிமிர்த்தி அவளை நோக்கிஞன். அவன் கண்களினின்றும் நீர் அருவியாகப் பெரு

கியது அங்கு மற்ற உத்தியோகத்தர்கள் வருவதை அறிந்து, "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் மாலா. அன்று ஸ்ரீதரா லும் மாலாவாலும் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. அவனின் மனதிலுள்ளதை அறியாது பலப்பல எண்ணி மனம் வருந்தினாள் மாலா.

மாலை மணி ஐந்தாயிற்று. எல்லோரும் தத்தம் வேலைகளை முடித்துக் கொண்டு சென்று விட்டனர். இருவர் மட்டுமே அங்கு இருந்தனர். ஸ்ரீதர் தன் அறையைப் பூட்டிவிட்டு தள்ளாடிய நடையுடன் வந்தான். அவன் முகம் வீங்கியிருந்தது. அவன் கண்கள் சிவந்திருந்தன. மாலா இன்னும் செல்லவில்லையென்பதைக் கண்டு, "மாலா" என்றான். அவன் குரல் தழுதழுத்தது. அவனை ஏறிட்டு நோக்கினாள் மாலா. இருவர் விழிகளிலும் நீர் நிறைந்தது. ஸ்ரீதர் வெடுக்கெனப் பாய்ந்து அவள் மலர்க் கரங்களைப் பற்றி தன் மார்பிலே பதித்தான்.

"ஸ்ரீதர்"

"மாலா நான் உனக்குத் துரோக மிழைத்து விட்டேன். மாலா! துரோக மிழைத்து விட்டேன்".

"என்ன?" என்றாள் திடுக்கிட்டு.

"என் திருமணத்திற்கு இன்னும் பத்து நாட்களே இருக்கின்றன" என்று அவன் கூறி முடியவும் மாலா நினைவிழந்து விழவும் சரியாக இருந்தது.

அவள் மயக்கம் நீங்கி எழுந்ததும், "ஸ்ரீதர்! என்னை மறந்து விடுங்கள். ஆனால் உங்களை என்னால் மறக்கவே முடியாது, என் சகோதரியைக் கண்கலங்க விடாதீர்கள்" தழுதழுத்த குரலில் கூறிவிட்டுத் தள்ளாடியபடியே சென்றாள் மாலா.

"மாலா, மாலா" என்று கத்தினான் ஸ்ரீதர். அவள் திரும்பிப் பார்க்கவேயில்லை.

மாலாவைப் பிரிந்த அன்றே காரியாலயத்தை மறந்தான். பைத்தியம் பிடித்தவனைப்போல் திரிந்தான். அவன் மனதை மாற்ற தந்தை எடுத்த முயற்சிகள் யாவும் வீணாயின.

திருமணத்திற்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தன. மகன் மனதை எப்படி மாற்றுவது என்று சிந்தித்த படியே தன்னைமறந்து நடுரோட்டில் சென்றுகொண்டிருந்த ஜகன்னாதன் ரோட்டோரத்தில் வந்து வீழ்ந்தார். சுய உணர்வு பெற்ற அவர் சுற்றும் முற்றும் பார்த்தார். ரத்த வெள்ளத்திலே மிதந்தான் ஒருவன். நடந்தவை யாவற்றையும் அறிந்தார். தன் உயிரைக் காப்பாற்றிய உத்தமனை டாக்ஸி ஒன்றின் மூலமாக பிரபல டாக்டர் ஒருவரிடம் கொண்டு சென்றார். "இரத்தம் அதிகம் வெளியேறி விட்டது. இன்னும் சிறிது நேரத்திற்கு மட்டுந்தான் உயிருடனிருப்பார்" என்றி கூறினார் டாக்டர். அப்பொழுது "அப்பா! அப்பா!! என்று கதறிக்கொண்டு அவன்மீது வீழ்ந்தாள் ஒரு மங்கை.

"மாலா" என்று கூறி மறுபடியும் நினைவிழந்தார் மாலாவின் அப்பா சண்முகம்.

"தந்தை காரிலடிபட இருந்து ஒருவரால் தப்புவிக்கப்பட்டார்" என்ற செய்தியைக் கேள்வியுற்ற ஸ்ரீதர் அவ்வுத்தமனைக் காண ஓடி வந்தான். அறையினுள் காலடியெடுத்து வைத்தவன், "மாலா!" என்று கத்தினான். அவனைப் பார்த்து விட்டுத் திரும்பித் தன் தந்தையை நோக்கினாள். அவர் வரும்படி கையசைக்கவே அருகில் சென்றாள்."

"மாலா உன் வாழ்வு பூரணமாகாமலே நான் உன்னை அனாதையாக இவ்வுலகில் விட்டுச் செல்கின்றேன். அது ஒன்றே என்குறை" என்றான். இதுவரை நடந்தவை யாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஜகன்னாதன் மாலாவே ஸ்ரீதரின் காதலி என்பதை அறிந்து சண்முகத்தின் பேச்சில் குறுக்கிட்டார். "பெரியவரே! உங்கள் மகள் அனாதையல்ல. அவள் இன்றுமுதல் என் மருமகள். என் மகனையும் மாலாவையும் நான் அந்தஸ்து, சாதிபேதம் பார்த்து பிரிக்க முயன்றேன். நீங்களே அவர்களை ஒன்றுசேர்த்து விடுங்கள்" என்றார் ஜகன்னாதன். மாலாவின் கரத்தைப் பற்றி ஸ்ரீதரின் கரத்தில் வைத்து அவர்களுக்கு ஆசி கூறி முடிந்ததும் நிம்மதியுடன் அவர் உயிர் இவ்வுலகினின்றும் பிரிந்தது "அப்பா" என்று அலறியபடி அவர் உயிரற்ற உடலில் விழுந்து புரண்டழுதாள் மாலா.

மாலாவின் கண்களிலிருந்து நீர் வடிந்தது. ஸ்ரீதர் திடுக்கிட்டு அவள் கண்ணீரைத் துடைத்தபடியே

"மாலா ஏன் அழுகின்றாய்?" என்றான்.

"ஒன்றுமில்லை அத்தான். என் மனம்போல் மாங்கல்யத்தை அளித்துவிட்டு அப்பா சென்றுவிட்டார். அதை நினைத்த பொழுதுதான் கண்ணீர் வந்துவிட்டது" என்றாள்.

"அவர் எங்களை வாழவைத்த தெய்வம்" என்றார்.

அப்பொழுது "அப்பா இது யாருக்கு?" என்று கேட்டபடியே ஸ்ரீதர் வாங்கிவந்த சேலையை விரித்து இழுத்து வத்தான் ரவி. "இது உன் மனைவிக்கு" என்று குறும்புடன் கூறிவிட்டுச் சிரித்தார் ஸ்ரீதர். அவர் சிரிப்பிலே மாலாவும் சேர்ந்து கொண்டாள். தந்தை சொன்னதைப் புரிந்துகொண்டவன் போன்று ரவியும் சேர்ந்து சிரித்தான்.



# அட்டைப்படக் கவிதைப் போட்டி

சென்ற இதழ் அட்டைப் படத்தை விளக்கிக், கவிதைகள் புனைந்து அனுப்புமாறு' கேட்டிருந்தோம். இளங்கவிஞர்கள் பலர் உற்சாகத்துடன் கவிதைகள் அனுப்பி வைத்தனர். திரு. பி. ஜி ராசதுரை (ராஜபாரதி) பல்கலைக் கழகம், பேராதனை; திரு. ச. வே. பஞ்சாட்சரம், இணுவில்; திரு. மு. வ. மாணிக்கவாசகர் (முகிலன்) வேலணை, ஆகிய மூவரது கவிதைகள் முதலிடம் பெறுகின்றன. அவற்றைக் கீழே வெளியிட்டுள்ளோம். இவர் கட்கும் தரமான கவிதைகளை எழுதியனுப்பிய செல்வி நா. தனலட்சுமி, குரும்பசிட்டி; செல்வன் க. வே. மகேந்திரன், குரும்பசிட்டி; ஆகியோருக் கும் ஆறு மாதங்கட்கு 'கலைச்செல்வி" இலவசமாக அனுப்பப்படும். பரிசு பெற்றோருக்கு எமது பாராட்டுதல்களையும், கலந்துகொண்ட எல்லோருக்கும் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

—ஆசிரியர்

## மழலைச் சிரிப்பு......?

'இராஜபாரதி'

1

விழுங்கமழின் நாற்றம் விரவியெழுங் கொண்டல்
குலுங்கிமெல வீசுங் கொழுங்கானம் —அழுங்குழந்தை
வீற்றுத் தனியிருந்தும் விம்மியழா தென்னையெனின்
தேற்றும் இயற்கைத் திறன்!

2

தாய்ப்பா லருந்துகையிற் றான்சிரிக்குஞ் சின்னவிதழ்
வாய்ப்பால் சுரக்க வழூவிரலைச் — சூப்பிநகை
ஈட்டுவதே காட்டும் இயற்கைத்தா யின்திறனை
கூட்டும் புனித குணம்.

3

பச்சைத் தருக்கள், படரும் மலர்க்கொடிகள்
உச்சத் தலைமேல் உயர்ந்திருக்க — வச்சிரத்தின்
வண்ணச் சிலையும் வதங்குமோ, மெய்வனப்புச்
"சின்னம்" உணர்த்தும் சிறப்பு.

4

அரும்பு நுதலில் அழகுகரித் திலகம்
குறும்பு வளரிடக்கை கொம்பசைப்ப — 'சுரும்பினங்கள்'
ஆர்க்குந்தாலாட்டில் அகமகிழுங் காட்சியதே
தேர்க்கும் இசையின் திறன்!

5

மெத்தென்ற புல்லும் மினுக்கு நறுமலரும்
பத்துமதி தாண்டாப் பாலகனை — எத்தால்
இழுத்ததோ வந்த இன்பநுகர் வொன்றே
[illegible] கவியின் பயன்.

# எதனைப் பார்த்து மகிழ்கின்றாய்?

(ச. வே. பஞ்சாட்சரம்)

எழுஞாயிறுமுகம், தோகைமயில்
இறகின்பொட்டுக் கருவிழிகள்,
செழுரோஜாப்பூச் சிரிக்கும்வாய்,
செவ்வாழைமுளை அவ்வாயுள்
நுழையும் விரல்கள், மருப்பினிலே
நுணிதாய்ச்செய்த சிலைஉருவம்!
எழிற்காவுற்றிவ் விதம்செல்வீ
எதனைப்பார்த்து மகிழ்கின்றாய்?

உளரும், இலரும் பொல்லாரும்,
உறவும், பிறரும், ஈன்றாரும்,
இளைஞர், சிறுவர், முதியோரும்
இனிதுதூய அன்புடனே
கிளர்ந்து போற்றும் நிலையினிலே,
கேடில்இறைவன் போன்றவளே,
வளரும்பயிரே, எழிற்செல்வீ,
மகிழ்ந்துஎதனைப் பார்க்கின்றாய்?

இணைந்துஇயற்கை தனிற்தூய
எளியஇன்பம் நிறைவமதி
அணைந்துவாழ்ந்த பழந்தமிழர்
அரியபண்பில் நிறைந்தனையோ?
பிணைந்துபலவெழில் உருவான
பெட்புடையுன்னை யிறைவன்தான்
கொணர்ந்திவ்வேற்ற சோலையிலே
குந்தவைத்துநிற்பானோ?

# குழந்தை

- முகிலன் -

மாலை நேரம் தோட்டத்தில்
மகிழ்ந்திருக்கும் குழந்தாயே
சோலைத் தென்றல் சுவைத்து — நீ
சிரித்து உள்ளம் மகிழ்ந்தாயோ?

உயர வளர்ந்த மரங்களுமே
உன்னைச் சூழ்ந்து இருக்கையிலே
பயமே சிறிதும் இன்றி — நீ
பார்த்திருப்ப தெதனையோ?

அஞ்சி நித்தம் செத்திடும்
அவனி மாந்தர் பலருக்கு
பிஞ்சுக்குழந்தாய் நீயும் — நற்
பாடம்புகட்ட வந்தாயோ?

நெற்றி தன்னில் திலகமிட்டு
நீண்ட மயிரைச் சீவிவிட்டு
வெற்றிச் சிரிப்பை உதிர்க்கும் — நீ
விரலைவாயில் வைப்பதுமேன்?

காலில் செருப்பு மாட்டியும்
மேலிற் சட்டை பூட்டியும்
காலைநீட்டி இருக்கும் — நீ
யாரைப்பார்த்துச் சிரிக்கின்றாய்?

---


## கலைச்செல்வி விற்பனையாளர்கள்.

**கலைச்சோலை நூலகம்**
80, வித்தியாலய வீதி
திருக்கோணமலை.

**T. நடராசா**
நியூஸ் ஏஜென்ஸ்
மல்லாகம்

# ஆனந்தக் கோனாரே!

எல்லாம் அறிந்த ஆனந்தக் கோனார் வீட்டில் ஒருமுறை மூட்டுப் பூச்சியின் படையெடுப்புக் காரணமாக சிலோன்மணி புறமுதுகிட்டோடி வந்து தமது கணவரும் எல்லாம் தெரிந்தவருமான ஆனந்தக் கோனாரிடம் தஞ்சம் புகுந்தனள்.

அபயம் அளித்த ஆனந்தக் கோனார் ஒரு அலட்சியச் சிரிப்பை வீசிவிட்டு—

"பேதாய்! மூட்டுப்பூச்சியை ஒழிக்கவா எண்ணினை? எத்தகைய வேலை செய்தனை! உன் மடமைதான் என்னே! உனது உடலிலும் எனது உடலிலும் ஓடும் ரத்தத்தில் தோன்றி வளரும் நமது மகன் படுசுட்டி நமக்கு ஒரு தீங்கைச் செய்தால் நாம் வஞ்சம் தீர்க்க முடியுமா? அப்படியே நமது ரத்தத்தைக் குடித்து வாழும் மூட்டுப் பூச்சியையும் நாம் அழித்துவிட முடியாது. அதுதான் ரத்த பாசம்" என்று திருவாய் மலர்ந்தருளினார்

—கொழும்பு சிவம்

# அட்டைப் படம்

மட்டக்களப்பு, காரைதீவிலே பிறந்து, இலங்கையிலும் இந்தியாவிலும் கல்வி கற்பித்து, தமிழ் மொழிக்கும், கலைக்கும் தொண்டு செய்த **அருட் திரு. விபுலானந்த அடிகளாரது** படத்தைப் பெருமையுடன் அட்டையில் வெளியிடுகின்றோம். அண்ணாமலை, இலங்கைப் பல்கலைக் கழகங்களின் தமிழ்த்துறைத் தலைவராயும், 'வேதாந்த கேசரி' 'பிரபுத்த பாரதம்' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும், யாழ் நூலைப்பற்றி ஆராய்ந்து எழுதிய ஆராய்ச்சிப் பேரறிஞராகவும் விளங்கிய அடிகளாரை நினைந்து மட்டக்களப்பு மட்டுமல்ல, ஈழநாடே பெருமையடையலாம்.


# கலைச்செல்வி விற்பனையாளர்

மு. செ. நெ. முகைய்யதீன்
ஜின்னா புத்தகசாலை
அக்கரைப்பற்று.

G. C. E. இந்து சமய

# சைவ சமய பாடத் திரட்டு

## (SAIVAISM)

எழுதுபவர்கள் :-

வித்துவான் பொன் முத்துக்குமாரன் பி. ஓ. எல்.

பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா

அநேக கல்லூரிகளிலும் உயர்தர தமிழ்ப் பாடசாலை களிலும் இந்நூலையே மிகவும் விரும்பி உபயோகிக் கிறார்கள்.

❁ பரீட்சைக்குரிய முழுப்பகுதியும் அவற்றுக்குத் தெளிவான உரைக்குறிப்புகளும், பயிற்சி வினாவிடை களும், விசேட அனுபந்தக் குறிப்புகளும் அடங்கிய நூல் இது ஒன்றே.

இப்போது 2-ம் பதிப்பு வெளியாகியுள்ளதிலிருந்தே இதன் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

❁ விலை ரூபா 3-25. (பார்சல் செலவு சதம் 35)

பாடசாலைகளுக்கும் வியாபாரிகளுக்கும் தகுந்த கழிவு உண்டு.

விற்பனையாளர் :-

### ஆனந்தா அச்சகம் : புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, : யாழ்ப்பாணம்.

"நகைச்சுவையும் நல்ல கருத்தும் கலந்தென்றும்
பகையுணர்ச்சி மாய்க்கும் பட் பட்"

# "பட் பட்"

—தாண்டவக்கோன்—

ப. சுந்தரம், ஹற்றன்.

கே. இப்போதிருக்கும் சூழ்நிலையில் இலங்கைக்கு எவ்வித ஆட்சி பொருத்தமானது?

ப. ராஜாஜியைப் போன்ற ஒருவரின் சர்வாதிகார ஆட்சி.

சி. ராஜலிங்கம்; திருமலை.

கே. பெண்களை ஏன் மானுக்கும் மயிலுக்கும் ஒப்பிடுகின்றார்கள்?

ப. 'எங்களை ஏன் சிறுமைப்படுத்துகின்றீர்கள்' என்று அம்மிருகங்கள் கோபித்தெழாது பாருங்கள்.

முல்லைவாசி, முல்லைத்தீவு

கே. இந்தியாவில் அதிக அளவில் விற்பனையாகும் தமிழ் வார இதழ் எது?

ப. ஆனந்தவிகடன். வாரமொன்றிற்கு ஒரு லட்சத்து நாற்பத்தையாயிரம் பிரதிகள் விற்பனையாகின்றன.

க. இராமசாமி, கண்டி,

கே. நமது நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு விருத்தி செய்யலாம்?

ப. ஒலிபரப்பிகள் ஒழிக்கப்பட்டு, கார்களின் தொகை கட்டுப்படுத்தப்பட்டு நைலோன், ஜோர்ஜற்றுகள் நாட்டைவிட்டே ஓட்டப்பட்டால் நமது பொருளாதாரம் நல்ல முறையில் வளர்ந்தோங்கும்.

செ. இராதாமணி, சாவகச்சேரி.

கே. நான் இலக்கிய சேவை செய்ய விரும்புகின்றேன். ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கலாமா?

ப. வேண்டாம். ஆரம்பிக்காமலிருப்பதே அரும்பெரும் இலக்கிய சேவையாகும்.

நா. பா. மணியம், மன்னார்.

கே. 'கலைச்செல்வி' யில் இப்போது மாதச் சிறுகதைகளின் விமர்சனம் ஏன் வெளியாவதில்லை?

ப. தமிழ்ப் பத்திரிகை உலகிலேயே இந்தப் புதுமையான முயற்சியை ஆரம்பித்தது 'கலைச்செல்வி' தான். 'கலைச்செல்வி' யைப் பின்பற்றி இப்போது வேறோர் பத்திரிகை இப்பணியைச் செய்து வருவதால் நமது ஆசிரியர் இப்பகுதியை நிறுத்தியிருக்கலாம்.

'காத்தவராயன்' கரவெட்டி.

கே. இலங்கைத் தமிழர்களிடமுள்ள குறைபாடுகளை அகற்றுவதற்கு வழி...?

ப. 'சவாரித்தம்பரும்' 'சின்னக்குட்டியண்ணை' யும் உயிர்பெற்று ஊர் ஊராக உலாவி வரவேண்டும்!

ம. காந்திமதி, பதுளை

கே. கடல்நீர் ஏன் கைக்கின்றது?

ப. அது உப்பாயிருப்பதால்.

எஸ். ராஜம், கல்முனை

கே. கடவுள் உங்களுக்கு முன்காட்சி கொடுத்தால், என்ன கேட்பீர்கள்?

ப. 'கலைச்செல்வி' யின் சந்தாவை இன்னும் ஏன் கட்டவில்லை

[illegible]

கே. பிரபல எழுத்தாளர [illegible] வேறு ஏதாவது புனைபெயர்களிலாவது எழுதியிருக்கின்றாரா?

ப. ஆம். ஸம்பாதி, ஆர். எம், அம்பி, விச்சு, காயத்ரி, விருச்சிகம், தம்பியார், மயூரம், கேட்டை ஸிம்ஹம் ஆகிய பல பெயர்களுக்குள் மறைந்திருந்து எழுதியவர் 'தேவன்'

கார்வண்ணன், அக்கரைப்பற்று

கே. மறுபிறப்பில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?

ப. முன்பு இல்லை. இப்பொழுது இருக்கின்றது. முற்பிறப்பில் பச்சோந்திகளாகவும், விலாங்குகளாகவும், வௌவால்களாகவும் இருந்த பலர் இன்று வாசலுக்கு வாசல் நின்று வாக்குப்பிச்சை கேட்கிறார்கள்!

செ செல்வமணி,
காங்கேசன் துறை.

கே. அங்கங்கள் தெரிய ஆடைகள் அணிவோரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப. அவர்களைப் பார்க்கும்போது கம்பி வேலியிட்ட தோட்டத்தின் நினைவு வருகின்றது. பொருளுக்குப் பாதுகாப்பு உண்டு. பார்வையும் மறைக்காது.

அ. காளியப்பன், இரத்தினபுரி.

[illegible]

எஸ். வாசந்த, [illegible]

கே. விரதம் அனுட்டிப்பதனால் ஏதாவது நன்மை ஏற்படுமா?

ப பாவ, புண்ணியக் கணக்கு ஒரு புறமிருக்க, குடிக்கக் கஞ்சியின்றி வாடும் ஏழை மக்களின் கஷ்டத்தை அனுபவ பூர்வமாக உணரலாமல்லவா?

இ. புண்ணியமூர்த்தி, கொழும்பு.

கே. 'ஆலயந் தொழுவது வேலை மினைக்கேடு' என்று சில இளைஞர்கள் சொல்லுகிறார்களே!

ப. உண்மைதான். படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய எத்தனையோ வேலைகள் கடவுளுக்கு. ஓயாமல் ஒழியாமல் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் கடவுளை அழைத்து "நான் சோதனையில் பாஸ்பண்ண வேண்டும்" "நான் விரும்பியவளைக் கல்யாணம்செய்துகொள்ளவேண்டும்' என்றெல்லாம் அழுது தொழுதால் கடவுளின் வேலை 'மினை'க்கெடாதா?

குறிப்பு; நேயர்கள் தங்கள் கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதி, கீழேயுள்ள முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். சிறந்த கேள்விக்கு 2 ரூபா பரிசு உண்டு. இம் மாதம் பரிசு பெறுபவர்: செல்வி. செ. செல்வமணி, காங்கேசன்துறை

தாண்டவக்கோன்

மே/பா கலைச்செல்வி

கந்தரோடை : சுன்னுகம்


# சந்தா நேயர்களுக்கு

புதிய ஆண்டிற்குரிய சந்தாத் தொகையைத் தயவு செய்து விரைவில் அனுப்புக. உடனடியாக அனுப்ப முடியாதவர்கள், எந்தத் திகதிக்குள் அனுப்ப முடியும் என்பதையாவது இப்போது அறிவிப்பது நல்லது.

ஆண்டுச் சந்தா : : ரூபா 4 - 00

## கலைச்செல்வி

கந்தரோடை சுன்னுகம்.

# லங்கா ரிறேடிங் காப்பறேஷன்

31-3, ஸ்ரான்லி ரேட்,

**யாழ்ப்பாணம்.**

கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
சீமெந்து (காங்கேசன்)
உருண்டைக் கம்பிகள் (எல்லா வகைகளும்)
கேடர் வகைகள் எல்லாசைஸ்களும்
தீந்தை, வார்ணிஸ் வகைகள்
டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
பித்தளைப் பூட்டு, பித்தளைப்பிணைச்சல்
பித்தளை ஆணிவகை, மின்சாரச் சாமான்களும்
பைப்புக்குளாய் எல்லா சைஸ்களும்

**எங்களிடம்**

மிகவும் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இரும்புக் கேற்றுகள், மாபிள் மேசைகள். அதற்கேற்ற இரும்புக் கதிரைகளும் ஓடருக்குச்செய்து கொடுக்கப்படும்.

# ஆறுமுகம் ஹாட்வயர் ஸ்ரோர்ஸ்

நேரடி இறக்குமதியாளர்.

போன்: 302 | Phone: 302

**எங்களிடம் கட்டிடத்திற்கு தேவையான**

V

சகல விதமான சாமான்களும் நேர்மையான
முறையிலும் நிதானமான விலையிலும்
பெற்றுக் கொள்ளலாம்.

V

# ARUMUGAM HARDWARE STORES

DIRECT IMPORTERS

NO. 19, GRAND BAZAAR, JAFFNA.

# கடந்த ஆண்டின் சிறந்த இலக்கியங்கள்
## எழுதிய ஆசிரியருக்குப் பாராட்டு

கொழும்பில் நடைபெற இருக்கும் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டையொட்டி, சென்ற ஆண்டில் வெளியான மிகச்சிறந்த சிறுகதை, கவிதை, நாவல் ஆகியவற்றைத் தெரிவு செய்து, அவற்றைப் படைத்த எழுத்தாளர்களை மகாநாட்டில் பாராட்டுவதென இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக் குழு தீர்மானித்துள்ளது.

ஈழத்து எழுத்தாளர்களின் சிறந்த இலக்கியங்களைத் தெரிவு செய்து, அவற்றை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், எழுத்துத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமுண்டாக்கி கருத்துச் செறிவும் ஆழமும் பயனுமுள்ள தரமான இலக்கியங்களை மேலும் மேலும் படைக்க ஊக்குவிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் தெரிவு ஆண்டு தோறும் நடைபெறும்.

அத்துடன், இலங்கையில் புத்தக வெளியீட்டு முயற்சியை ஊக்கப்படுத்தி வளர்ப்பதற்காக, சிறந்த முறையில் வெளியிடப்பட்டுள்ள புத்தக வெளியீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்து பாராட்டுவதெனவும் எழுத்தாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. இலக்கிய முயற்சியாக வெளிவந்த நூல்களே இத் திட்டத்தில் அடங்கும். நூல் இலங்கையில் வெளியிடப் பட்டதாக இருக்க வேண்டும். நூலின் அச்சு, அழகு, அமைப்பு, கட்டு முதலிய அம்சங்கள் கவனிக்கப்படும்.

இவற்றைத் தெரிவு செய்வதற்காக தமிழ் அறிஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள் ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழு ஒன்று. நியமிக்கப்படும். குழுவில் அங்கம் வகிப்பவர்களது பெயர்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க வெளியீடான 'புதுமை இலக்கிய' த்திலும், மற்றும் பத்திரிகைகளிலும் பின்னர் அறிவிக்கப்படும்.

ஆகவே, எழுத்தாளர்கள், 1959, ஜனவரி தொடக்கம் டிஸம்பர் முடிவு வரை அச்சில் வெளிவந்த தங்கள் சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள் ஆகியவற்றையும், பிரசுர கர்த்தாக்கள் தமது வெளியீடுகளையும் அனுப்பித் தரும்படி கேட்டுக்

கொள்ளப்படுகிறார்கள். இவற்றை மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
91/6, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

# எழுத்தாளர் பட்டியல்

9. வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) 9/1, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் மஸ்றஉத்தீன் பாடசாலை ஆசிரியர். 'ஆனந்தன்' இணை ஆசிரியராகவும், "தமிழரசு" ஆசிரியராகவும் பணியாற்றினர். "தாயின் மணிக்கொடி", "காணிவல் காதல்" ஆகியவற்றையும் பல பாடப் புத்தகங்களையும் எழுதியுள்ளார். பிறந்த திகதி: 8. 5. 1929.

10. சி. பொன்னம்பலம் (ஆதவன் மஞ்சு). "ஜோதி", அளவெட்டி தெற்கு அளவெட்டி. சுன்னுகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி ஓவிய ஆசிரியர். 'கலைச்செல்வி' நிர்வாகக் குழுவைச் சேர்ந்தவர். நாணகங்களையும் ஆபரணங்களையும் சேகரித்து, அவற்றின் துணையுடன் பல சரித்திர ஆரய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். பிறந்த திகதி: 4.12.1917.

11. க. சொக்கலிங்கம். (சொக்கன் வேனிலான்) நாயன்மார்கட்டு. யாழ்ப்பாணம். கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை ஆசிரியர். "மலர்ப்பலி" 'செல்லும் வழி இருட்டு' ஆகிய நாவல்களையும், ஏராளமான சிறு கதைகளையும் எழுதியுள்ளார் 'கடைசிஆசை' என்ற கதை பரிசுபெற்றது. 'வீரத்தாய்' 'மனோன்மணி' ஆகிய நூல்களின் ஆசிரியர். யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கச்செயலாளர் பிறந்த திகதி: 2-6-1630

12. எஸ். சிவகுமாரன் (ரேவதி) 24, 40-வது ஒழுங்கை, வெள்ளவத்தை. சொந்த ஊர் மட்டக்களப்பு. சினிமா சம்பந்தமான பல சுவையான கட்டுரைகளை 'வீரகேசரி' யிலும் 'சுதந்திரனி' லும் எழுதியுள்ளார். சிறு கதைகள் சில வெளிவந்துள்ளன. விமர்சனத்துறையில் விசேட கவனம் செலுத்தி வருகின்றார். வயது: 22.

13. வே. சி. இராசரத்தினம் (கச்சாயில் இரத்தினம்) தேவாலக்கந்தை தெஹியோவிற்றை. சொந்த ஊர் கச்சாய். பல சிறுகதைகள் எழுதியுள்ளார். 'பாட்டாளி வாழ்க்கையிலே' என்ற கதை நூல் வடிவு பெற்றிருக்கின்றது. 'நரகம்' பரிசுபெற்ற சிறுகதை. வானொலியில் இவருடைய நாடகங்கள் ஒலிபரப்பாகின்றன. வயது: 43.

14 எஸ். எல். சவுந்தரநாயகம்: (சவுந்தரன், வன்னியூர் நாயகம், வன்னியூர்க் கவிராயர், மனோசரி, எஸ். எல். எஸ்.) ஆயுர்வேத வைத்தியர், இலுப்பைக் குளம், நேரியகுளம், மதவாச்சி. இலங்கைப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறுகதைகளும் கட்டுரைகளும், கவிதைகளும் எழுதியுள்ளார். வயது: 32.

15. சு. இராஜநாயகம் (இராஜநாயகன்) திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர். 'கலைச்செல்வி' யின் பதிப்பாசிரியர். லா. ச. ராமாமிர்தம் பாணியில் சிறுகதைகள் பல எழுதியுள்ளார். 'விழிப்பு' என்ற கதை பரிசு பெற்றது. 'ஈழத்துச் சிறுகதைகள்' முதலாம் தொகுதியில் 'அவன்' இடம் பெற்றிருக்கின்றது. பிறந்த திகதி: 27. 6. 1926.

—தொடரும்.

# வளருந் தமிழ்

விவேகி: ஆசிரியர்: M. A. ஆசீர்வாதம் 32, கண்டி வீதி யாழ்ப்பாணம். விலை சதம், 40.

பல புதுமையான கட்டுரைகளையும் சிறு கதைகளையும் கவிதைகளையும் கொண்டுள்ளது விவேகி. ஆசிரியரின் விடா முயற்சியினால் இளம் மாணவ மாணவிகளின் அறிவு வளர்ச்சிக்கு பெரும் நன்மையையும் பயனையும் கொடுக்கக் கூடியதாக அமைந்துள்ளது. ஈழத்திலுள்ள பல எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு இது பெரும் துணையாக இருக்கும்,

உடற் பயிற்சிக் கட்டுரைகள் மாணவர்க்குப் பயனளிக்கும் முறையாக அமைந்துள்ளது. பொது மக்களுக்கு நன்மையைக் கொடுக்கக் கூடியதாக உள்ளது வைத்திய விவேகி என்னும் பாட்டி வைத்தியம். குடும்ப சிக்கனம் பெண்ணின் பிறப்புரிமை — இக்கட்டுரை இரு பாலாருக்கும் முக்கியமாக மாதர்களுக்கு மிகவும் நன்மை தரக்கூடியது. சங்கீதப் பிரியர்களுக்கு பயன் கொடுக்கக்கூடியதாக அமைந்துள்ளது சங்கீத விவேகி, கொஞ்சம் விலையைக் குறைத்து இன்னும் நல்ல பல புதுமைகளைப் புகுத்தினால் மிகவும் பயன்படும். வரவேற்புமிருக்கும்.

—தியாகன்

மூன்றுவது கண்:- ஆசிரியர் திரு. கனக செந்திநாதன். விற்பனையாளர். வரதர் வெளியீடு, ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம். விலை 65 சதம்.

"மூன்றுவது கண்" என்ற பெயரில் வெளிவரும் இந்நூல், யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் 30 வருடங்களாகத் தமிழ்த் தொண்டு புரிந்த சைவப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது வாழ்க்கைச் சுருக்கத்தையும், வண்டமிழ்த் தொண்டையும் விளக்குகிறது.

இந்நூலாசிரியர் தாமேன் இந்நூலுக்கு 'மூன்றுவது கண்' என்ற தலைப்பைக் கொடுத்தார் என்பதைத் தமது முகவுரையில் கூறிவிட்டு, பண்டிதமணியின் வரலாற்றை இருபெரும் பிரிவாகப் பிரித்து எழுதியுள்ளார். ஒன்று (1930—1943) அவர் செய்த இலக்கிய சேவை, மற்றது (1942—1959) அவரது சமய சேவை.

பண்டித மணியின் வரலாற்றைக் கூற முன்வந்த ஆசிரியர், பண்டிதமணியின் நடைப்பாணியிலே சுவைபட, இனிய, எளிய நடையில் எழுதியுள்ளமை, அவர் பண்டிதமணியை எவ்வளவில் அனுபவித்து எழுதியுள்ளார் என்பதை வாசகர்கள் நன்கு அறியலாம்

மனிதன் வாழுங்காலத்திலே போற்றிப் பெருமைப் படுத்தத் தெரியாதவர்கள் தமிழர்கள் என்று ஒரு குறையுண்டு. அக் குறையைத் திரு. கனக செந்திநாதன் அவர்கள் நீக்கியதோடல்லாமல், யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பண்பாடு தவறாது வாழும் பெருமகனாரை (சி. க) அறிமுகஞ் செய்து வைத்த சிறந்த தொண்டென்று கூறினால் அது மிகையாகாது.

—நம்பி

# நோயற்ற வாழ்வு!

நீரிழிவு, வாதம், பீனிசம், தொய்வு, இரத்தக்கோளாறு
இவற்ருல் அவஸ்தைப்படும் பெருமக்கள்
நேரில் வந்து எம்மைச் சந்திக்கவும்.

குறைந் செலவில், கூடியவிரைவில்
குணமடைவீர்கள்.

## Dr. அ. வை. தங்கக்கணபதி,
[L. A. M., D. A. M., R.I.M.P.

# அம்பிகாபதி வைத்தியசாலை

**வழக்கம்பரை சுழிபுரம்.**

கிளை : சங்கானை கிழக்கு, பண்டைத்தரிப்பு,



## இன்றே வாருங்கள்
# இன்ப நிலையத்திற்கு

- சுவையான சிற்றுண்டிகள், காப்பி, தேநீர் குளிர்பான வகைகள்.
- சுத்தமான திறம் நல்லெண்ணெய்
- ருசிகரமான ஊறுகாய் வகைகள்.
- ஆனந்தவிகடன், கலைச்செல்வி, ஈழநாடு, பேசும்படம் கதம்பம், இன்ப இரகசியம், கலை, இந்துநேசன், கங்கை.
- ஏராளமான துப்பறியும் நாவல்கள், மலிவுப்பதிப்புகள்.

# இன்ப நிலையம்

ஸ்டேசன் வீதி, : : சுன்னுகம்.

# FANCY PALACE

## THE HAPPY PALACE

WITH

## HAPPY GIFTS

- ரேயல் தலைமுடிகள்
- ரேயல் சுவர்க்கடிகாரங்கள்
- ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனுக்கள்

ஆகியவற்றிற்கு

## யாழ்ப்பாணத்தில்

### ஏக விநியோகஸ்தர்கள்

கண்ணைக் கவர்ந்து மனதை மயக்கும்

பலவிதமான

## பரிசுப் பொருட்களை

### விசேட தினங்களில்

உங்கள் உற்ருர் உறவினருக்கும், நண்பர்களுக்கும், பேனு நண்பர்களுக்கும்

## வாங்கிக் கொடுங்கள்

தந்தி : Fancyware     போன் : 239

# பான்ஸி பலஸ்,

27, மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

எழுத்துலகிற்குப் புத்தம் புதியவர் செல்வி ராஜவதி ராஜரெத்தினம். B. A. 'அன்பின் வெற்றி' அவருடைய முதற்கதை. தமிழ்ப் பெண்ணின் பரம்பரைச் சொத்தான அன்பையும் தியாகத்தையும் பண்பட்ட நடையில் வெளியிடுகின்றது கதை.

# அன்பின் வெற்றி

ராஜவதி ராஜரெத்தினம்

**கமலா**

"கமலி! கல்லூரிக்குப் போக வேண்டாமா? நேரமாகிவிட்டது" என்ற வேணியின் குரல் என்னை விழிப்படையச் செய்தது. அவளிடம் எதுவும் கூருமல் அவசர அவசரமாக உடையை மாற்றிக் கொண்டு புறப்பட்டேன். என் இதயம் வேதனையால் வெந்து கொண்டிருந்தது. உள்ளத்தில் பொருமைத் தீ பொங்கி எரிந்து கொண்டிருந்தது. 'கமலி உன் உடம்பிற்கென்ன தலையை வலிக்கிறதா?' என்று பரிவுடன் கேட்டாள் வேணி. என் தலை மட்டுமா வலிக்கிறது? என் இதயமும் அல்லவா வலிக்கிறது என்று கூறவேண்டும்போல் தோன்றியது. என் உள்ளத்தில் கடந்த கால நினைவுகள் படமெடுத்தாடின.

வேணி என் சித்தப்பாவின் அருமந்த புத்திரி. தாயற்ற அவளைச் சிறுவயதிலேயே எங்களிடம் ஒப்படைத்து விட்டார் சித்தப்பா. மதுவின் போதையில் மயங்கிக் கிடக்கும் அவர் மகளைத் தான் வளர்க்க முடியுமா? அவள் எங்கள் வீட்டில் அடியெடுத்து வைத்து இன்றோடு பத்து வருடங்கள் பறந்தோடிவிட்டன. ஒன்பது வயதுச் சிறுமியாகக் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளத்தோடு நுழைந்த அவள் பத்தொன்பது வயதுப் பருவமங்கையாகத் திகழ்கிருள் இன்று. அவளை விட ஒருவயது உயர்ந்தவள் நான் இருவரும இணைபிரியாத தோழிகளாக வாழ்ந்து வந்தோம். எங்கள் ஒற்றுமையைக் கண்டு ஊரே அதிசயித்தது. எங்கள் ஒன்றிய இதயங்களில் வேற்றுமை கிடையாது. 'இணைந்த இதயங்கள் என்று கல்லூரியில் எல்லோரும் எங்களைக் கேலி செய்தனர். இணைந்த உள்ளங்களை, சகோதர பாசத்தை, அன்பின் பிணைப்பை அறுத்தெறிய வந்தார் சுந்து அத்தான், எங்கள் அத்தை மகன். டாக்டர் பட்டம் பெற்றவர். அவரைக்கண்டது முதல் என்னுள்ளம் அவருக்கு அடிமையாகிவிட்டது. இனம் புரியாத இன்பம் என் இதயத்தைத்தாக்கியது. அவர் இன்றேல் நானில்லை.

### சுந்தர்

அவள் இன்றேல் நானில்லை. என் இதயராணி இன்றேல் நானில்லை. கமலாவும் வேணியும் போட்டி போட்டு என்னிடம் பழகினர். அன்பைச் சொரிந்தனர். 'சுந்து அத்தான்' என்று அன்புடன் அழைத்தனர். அழகிலோ கமலா மேனகை யென்றால் வேணி ஊர்வசி; கமலா ரதி யென்றால் வேணி ரம்பை. ஆனால் கமலாவிடம் பழகும்போது ஒருவித சகோதர பாசமே தலை தூக்கி நிற்கிறது என்னிடம். வேணியுடன் பழகும் போது என் இதயப் பூந்தோட்டத்தில் இன்பம் தேனுகப்பாய்கிறது. உள்ளம் உவகை கொள்கிறது. ஏன் இந்த உணர்ச்சி? இதுதான் காதலா? ஆம்! வேணியை நான் காதலிக்கிறேன். கமலா என் சகோதரி. வேணி என் காதலி. ஆனல் அவள் என்னைக் காதலிக்கிருளா?

### வேணி

அவர் என்னைக் காதலிக்கிருரா? அல்லது கமலாவையா? சே... அவர் ஏன் என்னை விழுங்கிவிடுவதுபோல் பார்க்க வேண்டும்? அதுமட்டுமா, அன்று ஏன் அவ்வளவு குறும்பாக என்னிடம் நடந்துகொள்ள வேண்டும்? பூங்காவில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த என் கண்களை யாரோ பொத்திஞர்கள். "யாராயிருக்கும்? என் ஏகாந்தத்தை துணிவுடன் கலைக்க யாருக்கு இவ்வளவு தைரியம்?" என்று எண்ணியபடி தொட்டுத் தடவிப் பார்த்தேன். ஓஹோ! அவரா?!!. ஒரு கணம் என்னுள்ளம் புளகாங்கிதமடைந்தது. என் இதயப் பூங்கா மலர்ந்தது, அப் பூங்காவில் வண்டினங்கள் சுருதி கூட்டின. குயில்கள் பாடின. மயில்கள் ஆடின. ஆனாலும் நான் "ஐயா வைத்தியரே தங்கள் சாகசமெல்லாம் வைத்தியசாலையில் மட்டும் நடைபெற்ருல் நலமென எண்ணுகிறேன்" என்று கூறியபடி அன்புடன் அவர் கரங்களைஅகற்றினேன். என்னை விழிகளால் விழுங்கியபடி 'வேணி' என்ருர். அந்த ஒரு சொல்லில்தான் எத்தனை குழைவு! என்னுள்ளம் பாகாய் உருகியது. பின்பு அவர் 'நாளை இதே நேரத்தில் இதே இடத்தில் தேவியின் தரிசனம் கிட்டுமா?" என்ருர் நாடக பாணியில் குறும்பாக. நானும் சிரித்தபடியே 'அவ்வாறே அருள் புரிந்தோம் பக்தா!' என்றேன். கலகலவென்று சிரித்துக்கொண்டே என் கன்னத்தைத் தட்டினுர். மறு நிமிடம் வெட்கம் மேலிட 'கமலா தேடுவாள்' என்று கூறியபடி துள்ளி ஓடிவிட்டேன்.

### கமலா

துள்ளி ஓடிவந்தாள் வேணி அவளைப் பின்தொடர்ந்து வந்தார் அத்தான். காதல் நாடகத்தின் முதல் அத்தியாயம் ஆரம்பமாகி விட்டதா? இல்லாவிட்

டால் அத்தான் என்னை இவ்வாறு அலட்சியம் செய்வாரா? என்னைவிட என்ன மேன்மையைக் கண்டு விட்டார் அந்தப் பிச்சைக் காரியிடம். சீ... கேவலம் என்னை விரும்பாத அவரை நான் ஏன் நாடவேண்டும்? அவரை மறந்து விடத்தான் வேண்டும். ஆனால் இந்தப் பாழும் மனம் அவரை மறக்க மறுக்கிறதே. அத்தானை நான் அடைந்தே தீருவேன். தடைகளைத் தகர்த்தெறிவேன். வேணி என்ற துரோகி இருக்கும்வரை அவர் என்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். அப்படியானால்...? வேணி இறக்க வேண்டும். ஆம், அவள் சாவில் தான் என் இன்ப வாழ்வு உதயமாக வேண்டும். எவ்வளவு கொடூரமான எண்ணம்! இந்த எண்ணமே இனிக்கிறது எனக்கு.

### சுந்தர்

இந்த எண்ணமே இனிக்கிறது எனக்கு. தந்தத்திற் கடைந்தெடுத்தாற் போன்ற மேனியழகு, திங்களின் தண்ணொளியளிக்கும் முகம், கருவண்டன்ன சுழலும் விழிகள் இத்தனைக்கும் உரிய சித்திரப்பாவை இனி எனக்கே சொந்தம். வேணி இனி எனக்கே சொந்தம். ஆஹா! நான் பாக்கியசாலி. சந்தேகமில்லை. நான் பாக்கியசாலி! ஆனால் என் பொருட்டு சகோதரிகள் இருவருக்கிடையில் பிளவு ஏற்பட்டு விட்டது அதை எண்ணும்போது என் மனதில் அமைதியே இல்லை...

### வேணி

அதை எண்ணும் போது என் மனதில் அமைதியே இல்லை. கடந்த சில நாட்களாக கமலா ஏன் என்னிடம் கடு கடுப்பாக இருக்க வேண்டும்? இன்று ஏன் அவசியமின்றிக் கடிந்து கொண்டாள். நான் என்ன குற்றம் செய்து விட்டேன்.

கமலா அத்தானைக் காதலிக்கிறாள். 'சுந்தர்' என்ற நாலெழுத்து மந்திரத்தை எந்நேரமும் ஓதிக் கொண்டிருக்கிறாள். பார்க்குமிடமெல்லாம் அவர் பெயரைக் கிறுக்கி வைக்கிறாள். அப்படியென்றால் நான் அவரை மறக்கவேண்டும். என் அன்பிற்குரியவரை, இதயம் கவர்ந்தவரை இழக்கவேண்டும். என் உயிர் ஓவியத்தை, என் கற்பனைக் களஞ்சியத்தை நான் மறக்க வேண்டுமா? ஆம்! என் சகோதரியின் வாழ்வில் ஒளி வீசவேண்டுமென்றால் என் மனதில் இருள் மண்டவேண்டும். கற்பனைக்கோட்டை இடிந்து தூள் தூளாக வேண்டும். காதல் கனவுகள் கல்லடிபட்ட கண்ணாடிபோல் சிதற வேண்டும். அத்தானிடம் கமலாவை ஏற்றுக் கொள்ளச் சொல்ல வேண்டும்.

இதோ அவரும் வருகிறார். தைரியத்தைக் கைவிடேன். 'அத்தான் கமலாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்' என்றேன் அவர் வந்ததும் வராததுமாக. "ஏன்? அவள் நல்லவள்" என்றார். "அந்த நல்லவளைத் தாங்கள் அடைய வேண்டுமென்பதே என் ஆசை" என்றேன். திகைத்து விட்டார் அவர். "அத்தான் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். அல்ல! அல்ல! என்னை மறந்து விடுங்கள். என் ஆருயிர்ச் சகோதரியின் வாழ்வின் எதிரியாக இருக்க நான் ஒருபோதும் இசையமாட்டேன். அவளும் தங்களைக் காதலிக்கிறாள். உங்கள் உருவிற்குப் பூஜை செய்கிறாள். தயவுசெய்து அந்த நல்லவளை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு அகன்றுவிட்டேன். என் இதயம் வெடிக்கக் குமுறி குமுறி அழுதேன். நான் செய்த முடிவு சரிதானா?

### கமலா

நான் செய்த முடிவு சரிதானா? ஐயோ! வேணி! உன்னை வஞ்சிக்க நினைத்த பாவி நான். என்னை மன்

னித்து விடு. உன் அன்பு என்னை வென்று விட்டதம்மா. வேணி நீ அத்தானிடம் பேசிய ஒவ்வொருவார்த்தையும் என் கொடிய இதயத்தைத் துளைத்தது. உத்தமியான உன்னை வஞ்சிக்க நினைத்த இந்த வஞ்சகியை மன்னித்து விடு. வேணி என் துரோகத்தின் பரிசாக என் சொத்து சுகம் யாவற்றையும் உனக்களிக்கிறேன். எற்றுக்கொள். அதுமட்டுமா அத்தானையும் ஏற்று ஆனந்தமாக வாழ். உன் வளமான வாழ்வின் நடுவில் வந்த நான் வந்த சுவடு தெரியாமல் மறைந்து விடுகிறேன் என்னைத் தேடவேண்டாம். என்பொருட்டு நீ செய்யத் துணிந்த தியாகத்தையும், உன் அன்புள்ளத்தையும் எண்ணிப் பெருமைப்பட்டபடி இந்தப் பரந்த ஈழத் தமிழ்நாட்டில் இருந்தபடி இன்னலுறும் தமிழ்த் தாய்க்கு தொண்டு புரிகிறேன் உன் அன்பினுல் என்னை வென்றுவிட்டாய் வேணி! கொடுமையை அன்பு வென்றுவிட்டது வேணி!


கலைச்செல்வி
விற்பனையாளர்

V

சுத்தானந்த பவன்
வவுனியா.


# முரண்

## சாலை இளந்திரையன்

நீலத் திரைக் கடலே!
நீயாடும் பூம்பந்தில்,
ஒன்றில் குளிர்ச்சி என்ன-
ஒன்றிலே வெம்மை என்ன?
நீலப் பெருவானே!
நின்னிடத்து மங்கையரில்
திங்களுக்குத் தோழிகள் ஏன்?
ஞாயிற்றுக் (கு) இல்லை ஏன்?

நின்று குளிர்புனலே!
நீ வளர்க்கும் பூக்களிலே
ஒன்றேன் பகல் மலரும்,-
ஒன்றேன் இரா மலரும்?
சென்று வருங்காற்றே!
நின்றன் நடையினிலே
ஒன்றில் நளினம் ஏன்?
ஒன்றில் கொடுஞ்சுழல் ஏன்?

எங்கள் இயற்கையே!
நீயருளும் மங்கைவிழி
ஒன்றில் கனிவுளதேன்?
ஒன்றில் முனிவுளதேன்?
பொங்கும் விரிகடலே!
உன்றன் உடலழகு
நின்ருல் வெழுப்பாமேன்?
வீழ்ந்தாலோ நீலாமேன்?

கேட்டேன்; வெளியுலகைக்
கேட்டுவிட்டேன்! என்னிதயம்
ஓர்கால் நலதாமேன்?
ஓர்கால் அலதாமேன்?
போட்டேன் வினக்குறியை;
போனேன் இதயத்துள்:
அங்கே இருகண்கள்-
அங்கே இருவேறு!




# மலை நாட்டில்


## பாரதி

இன்றெல்லாம் தொட்டதற்கும் பாரதியை அழைக்கும் காலம் எங்கெங்கு எப்படிப் பாரதியை அழைத்தாலும் பாரதி மட்டும் மலைநாட்டு மக்களுக்காக பதுளை பாரதி கல்லூரியையும் பாரதி மலரையும் விட்டு நகரவே மாட்டார். மலைநாட்டு மக்களிலே அவருக்கு அலாதியான ஆசை.

உடல்தேய உழைத்து உழைத்து வாழ்க்கையே சலித்துப் போன உள்ளங்களின் இளந்தளிர்களுக்கு இன்று பதுளை பாரதி கல்லூரி கல்விப்பணி புரிகிறது. சோற்றுக்காகச் சேர்ந்தவர்கள் மத்தியில் ஆற்றலுக்காக அறிவுப்பணி ஆற்றுகிறது பாரதிகல்லூரி.



இதோ! இங்குதோன்றும் குழந்தைகள் பாரதிகல்லூரி மூலமாக கிளிநொச்சி காந்தி நிலையத்தாரின் உபகாரத்தில் விவசாயம், கைத்தொழில் நெசவு பயின்று வருகின்றனர்.



பாரதி கல்லூரியின் உயர்விற்குக் காரணர்களாக உழைப்பவர்களை நாம் வாழ்த்தவேண்டும்; போற்றவேண்டும்.

“மலைநாட்டை விலைபோட்டார்கள்; மலைநாட்டார் இருட்டறையில் இருந்ததற்கும் இருப்பதற்கும் கல்வியின்மைதான் காரணம்; ஆம்; கல்வி இல்லாத நாடோ, சமுதாயமோ அழிந்து போகும். அழிக்க எண்ணுபவர்கள் அவ்வாயுதத்தையே பிரயோகிக்கின்றார்கள் என்பதற்காகத்தான் கல்விக்கிளர்ச்சி நடத்தவேண்டிய அவசியத்திற்கு நாங்கள் ஆளாக்கப்படுகின்றோம்” இப்படிஒருவர் சொல்வதென்றால் செயலில் சளைத்தவராகார். இவர் பாரதிகல்லூரி அதிபர் திரு. க. இராமசாமி அவர்களே. இவர் செய்யுஞ் சேவை பெரிது; இவரோடு உழைப்பவர்களும் இவரும் மலைநாட்டுச் சகோதரரின் நலனுக்காக வாழவேண்டும்; அவர்கள் வளம் பெருகவேண்டும்.

இங்கே தோன்றும் இளைஞர்கள் பாரதிகல்லூரிமூலம் தமிழரசுக் கட்சியினரும் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தினரும் வழங்கிய உபகாரச் சம்பளத்தைப் பெற்று, யாழ்நகரில் மேற்படிப்புப் படித்து வருகின்றனர்.

ஆதவன்

# லங்கா நிதி லிமிற்றெட்

நிரந்தர சேமிப்புக்கு, கீழ்க் குறிக்கப்பட்ட வீதம்

## வட்டி கொடுக்கப்படும்.

1 வருடம் - 6 சத வீதம்.
2 வருடம் - 7 சத வீதம.
3 வருடம் - 8 சத வீதம்.
5 வருடம் - 9 சத வீதம்.

சேமிப்பு கணக்கிற்கு

## வருடம்
## 5 சத வீதம் வட்டி கொடுக்கப்படும்

நவின சேமிப்பிற் சேர்ந்து பல நன்மைகளேயும் அடையுங்கள்

இலங்கையில் விசேஷமாக ஏற்படுத்தப்பட்டது.
முழு விபரங்களும் இலங்கா நிதி ஆபீசில் அறியலாம்.

# இலங்கா நிதி லிமிற்றெட்

திருநெல்வேலி : : யாழ்ப்பாணம்.

கிளை :
284, காங்கேசன் துறை வீதி : : வண்ணார்பண்ணே

# யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாப நிதி

--1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது--

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா

இதுவரை கொடுக்கப்பட்ட பங்குப்பணம் 616313.00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

### பங்குப்பணம் கட்டு முறை

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமான 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த கால முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

### தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

### தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 8 விகிதமும் 6 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

### உண்டியல்கள்

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பிரீயல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியுலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விஷேச ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூல்மாக
அறிந்து கொள்ளலாம்

**எஸ். கனகசபை**
சிருப்பர்.

# அஸ்தமனம்

இலங்கையில், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் நாடகத்துறையின் ஆக்கத்திற்கு ஊக்கமளித்து உழைத்து வருபவர்களுள் முன்னணியில் நிற்பவர்கள் திரு. செ. இராசதுரை, திரு. எஸ். பொன்னுத்துரை, திரு. எம். எஸ். பாலு போன்றவர்கள். 'சங்கிலியன்', 'முதல் முழக்கம்' போன்ற நாடகங்கள் அதற்கு சாட்சி பகரும்.

'நல்லதீர்ப்பு' 'அந்தநாள்' ஆகிய சிறந்த நாடகங்களை வெற்றிகரமாக மேடையேற்றிய திரு. பொன்னுத்துரை அவர்கள் 'முதல் முழக்கம்' என்ற முழு நீள சரித்திர நாடகத்தை அரங்கேற்றினர்கள். இந்நாடகம் கிழக்கு மாகாண மக்களின் பாராட்டைக் கவர்ந்ததெனலாம். இரண்டாண்டுக்குப் பின்னர் 'அஸ்தமனம்' என்ற நாடகத்தை அரங்கேற்றினர்கள். மட்டக்களப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் அக்கல்லூரி மாணவர்களால் நடிக்கப்பட்ட இந்நாடகம் மௌரிய சாம்ராஜ்யத்தின் அழிவுக் கட்டத்தைச் சித்தரிக்கிறது. அசோகனின் அண்ணனை சுசீமனுக்கு எதிராகச் சாணக்கியன் பின்னிய சூழ்ச்சி வலையைச் சித்தரிக்கிறது, அரங்கேற்றப்பட்ட அங்கம்.

வசன அமைப்பில் உயிர் இருக்கிறது. சிந்தனைக்கும், துணுக்கு வசனங்களால் ஆசிரியர் உயிரூட்டுகிறார். உதாரணமாக, "அரச மோகத்தை உதறித்தள்ளி பிணி மூப்பு சாக்காட்டிற்கு மருந்து காணச் சென்றார் புத்தர்" என்று சாருவகி பேசும் பொழுது "சாவுக்கு மருந்து காணச் சென்றவனும் செத்துப் போனான்" என்று அசோகன் வெட்டுகிறான். இன்னொரு கட்டத்தில் "கொலைகாரன் மதுவெறியில் கிடக்கும் மகதவீரனைத் தட்டியெழுப்பி நான்தான் கொலைகாரன் என்று சொல்லியிருப்பானா? இப்பொழுது மகதவீரர்களின் வீரம் மதுவிலும் மங்கையர் அங்கங்களிலும் கரைக்கப்படுகிறது" என்று சொல்லும் பொழுதும்; பிட்சை கேட்கும் உபகுப்தருக்கு "அன்பைப் பற்றிப் போதிக்கும் அன்பரே! எப்பொழுது தொடக்கம் பிட்சைப் பாத்திரத்தில் பெண்களைச் சேர்க்கும் அரும்பணியில் ஈடுபட ஆரம்பித்தீர்?" என்று கேட்கும் கட்டத்திலும் சாணக்கியனின் வசனங்கள் நம்மைக் குத்தித் துளைத்துக் கொண்டு ஏறுகிறது. சில கட்டங்களில் நீண்ட வசனங்கள் நடிப்பைப் பாதிக்கிறது. மாணவர்கள் பேசுவதினால், முழுக் கருத்தையும் கிரகிக்க முடியாது போகிறது.

கதை மௌரிய காலத்தைச் சேர்ந்தது. பின்னல் நிறைந்தது. அதிலும் ஒரு கட்டம். ஆகவே மூன்றாம் காட்சி வரையில் கதை புரியாது போகிறது. காட்சி ஜோடனையும், உடை அலங்காரமும் போற்றுதற்குரியன. ஏனோதானோ என்று இல்லாமல், சிரமப்பட்டு உழைத்திருக்கிறார்கள். மகத காலத்திற்கு நம்மை அழைத்துச் சென்றுவிட்டார்கள். காட்சி, ஜோடனை, உடையலங்காம் ஒளிமாற்றங்கள் நாடகத்தின் உயிர்நாடி என்பதை உணர்ந்து திறம்படச் செய்ததை எவ்வளவும் பாராட்டலாம். நடிகர்களைப் பற்றியும் சில வார்த்தைகள். நாடகத்தின் உயிர்நாடி அவர்களல்லவா? 'அஸ்தமன' த்தில் சில நடிகர்கள் திரைப்பட நடிகர்களின் 'அக்சன்' களை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர்கால முன்னோடிகளல்லவா?

அஜாத்த சத்துருவாக நடித்த செல்வன் கிருபைராசா மெத்தியூஸ் சுசீமனாக நடித்த செல்வன் தியாகராசா, சாணக்கியனாக நடித்த செல்வன் நவரெத்தினம் போன்றோரின் நடிப்பு இந்நாடகத்தை [illegible]

# தேமதுரத் தமிழோசை

தமிழைத் தாய்மொழியாக அல்லாதவர்கள் பலர் தமிழை ஆவலோடு கற்று புலவர்களும் பண்டிதர்களுமாயிருக்கிறார்கள். தேம்பாவணி, இரட்சண்ய யாத்திரீகம், அவிவேக பூரண குரு கதை இவற்றை தமிழில் இயற்றிய கிரேக்க நாட்டு வீரமாமுனிவர் (கொன்ஸ்ரன்டைன் பெஸ்கி) தமிழர் இதயங்களை விட்டு என்றும் அகன்றிலர். 'போப்' என்ற ஆங்கிலேயர் தமிழை நன்கு வளர்த்தவர்; அவரை மறப்போமா? இப்படியே பலர் வரலாறுகள் தமிழ் நாட்டு இலக்கிய ஏடுகளிலே பொற்கோடுகளால் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் ஏன் தமிழைக் கற்றார்கள்? கற்கிறார்கள்? தமிழகத்தில் வாழ்ந்த முன்னோர்களின் தவப்பயன் அது. அவர்கள் தவப்பயனால் எழுந்த எழில் நூல்கள் திருக்குறள், சங்க இலக்கியங்கள், ஐம் பெருங்காப்பியங்கள் இந்த வாழ்வை எமக்குத்தந்தன. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தன.

இன்று இங்கே காணப்படும் அடிகளா[illegible] தென் மாகாணத்திலே காலிக்கும் மாத்துறைக்கும் இடையில் உள்ளதாகிய "உணவட்டுனே" என்ற கிராமத்தைப் பிறப்பிடமாக உடையவர். தமது பிறந்தகத்தின்மீது உள்ள பற்றினால், தனது பெயரின் முன்னே, உணவட்டுனே சுவாமி குணரத்தின [illegible]தேரோ என்று வழங்குவதில் மிகவும்



பிரீதி உடையவர். 1913 ஆம் ஆண்டு பிறந்தவர்; பாலப்பருவத்தி[illegible]லே, உணவட்டுனே கணந[illegible]நாம விகாரையின் அதிபராக [illegible]ழுந்த, காலஞ்சென்ற ஸ்ரீ மேதானந்த சுவாமி அவர்களது [illegible] ஸ்ரீ சுகுணானந்தசுவாமி அவர்[illegible]ம் உத்தம சீடனாகக் குரு க[illegible]ரசஞ் செய்தார். ஐந்து அ[illegible]கள் மத நூல்கள் பயின[illegible] காலியிலுள்ள வித்திய[illegible]ரகப் பிரி[illegible]வெனு எனும் பாட[illegible]யில், சி[illegible]ம், பாளி சமஸ்[illegible]த - ச[illegible] ஆகிய வற்[illegible] கொழும்

பில் வித்தியோதயப் பிரிவெனு விலும் ஒல்கோட் கல்லூரியிலும் ஆங்கிலம் படித்தார்.

1945 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சிங்களம் படிப்பித்தலோடு தமிழ் கற்றும் வந்தார். 1948 ஆம் ஆண்டில் கந்தரோடை ஸ்கந்த வரோதய கல்லூரியில் சிங்கள ஆசிரியராக நியமனம் பெற்று, சிங்களம் படிப்பித்தலோடு அமையாது, தமிழ் மொழியைக் கற்கவேண்டும் என்ற பேரவாவோடு, அங்கே கல்வி கற்பித்த பண்டிதர்களிடத்து, தமிழையும் முறையாக ஓய்வு நேரங்களில் கற்கத் தொடங்கினார். பொறுமையும் விடா முயற்சியும் இவரைத் தமிழ் மொழியிலும் வல்லவராக்கின. இவரது ஆற்றலால் மாணவர்களும், உடனுசிரியர்களும் பெரிதும் கவரப்பட்டனர். திருக்குறளை முறையாகக் கற்றதன் பயனுல் தமிழிலுள்ள பிற நூல்களையும் கற்க வேண்டும் என்ற ஆசை இவருக்கு இயல்பாக உண்டாயிற்று. சங்க இலக்கியங்களையும் ஐம்பெருங் காப்பியங்களையும் பயின்ருர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகிய ஜீவக சிந்தாமணியை, சரிதை வடிவாக (மணநூல் என்ற பொருளில்) "விவாகமகுள்" என சிங்களத்தில் இயற்றினுர். யாழ்ப்பாண வைபவ மாலை, புராதன யாழ்ப்பாணம் (இராசநாயக முதலியார் இயற்றியது) வைபவ கௌமுதி என்ற யாழ்ப்பாணச் சரித்திர நூல்களை வாசித்து, சிங்களத்தில் யாழ்ப்பாணச் சரித்திர நூல் ஒன்றை எழுதியுள்ளார். அந்நூலில்- தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம்- சங்கீதக் கலை- ஆலயத் திருப்பணிகள்- நியமங்கள்- தமிழர் விழாக்கள்- பரதசாஸ்திரம்- யாழ்ப்பாணத்துப் பெரியோர் வரலாறுகள்- புலவர்கள் சரித்திரம் ஆதியன குறித்து அழகாக எழுதியுள்ளார்.

தமிழ் மாணவர் சிங்களம் கற்கவும், சிங்கள மாணவர் தமிழ் கற்கவும் சுலபமான முறையில், தமிழ் சிங்கள போதினிகளை எழுதினுர். தமிழிற்கும் சிங்களத்திற்கும் சமானமான சொற்களைத் தொகுத்து 'தமிழ் சிங்கள சமசொற்கள்' என்ற அகராதியை ஆக்கினுர். இவர் தமிழில் பாலபண்டித பரீட்சை எடுப்பதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம், 1956 ஆம் ஆண்டு ஈழத்தில் ஏற்பட்ட கலவரங்களிடையே கலக்கம் கொள்வாராயினர்.

கிராமத்தவர்களும், கல்லூரி அதிபர் முதல் மாணவர்கள் வரையிலும் இவரைப் பிரிவதில் மனம் வருந்தினர். சில நாட்கள் சிங்களம் கற்பித்தலைத் தவிர்த்து கல்லூரி விடுதியில் ஆசிரியர்களதும் முகாமைக்காரர் அதிபராதியோரதும் ஆறுதலில் மனம் தேறியிருந்தார். இந்த எல்லைக்குள் மலாயா பௌத்த சங்கம் மலாயாவிற்கு தமிழில் பௌத்தமத பிரசாரம் செய்தற்

கு வருமாறு அழைத்தது. நல்ல சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட இந்த மலாயா வரவேற்பு கல்லூரி அதிபர்க்கும் முகாமைக் காரர்க்கும் ஆசிரியர்க்கும் ஒரு திருப்தியை ஏற்படுத்தியது. சாந்தமும், அமைதியும், பண்பாடும், நிறைந்த அடிகளாரைப் பிரிவதில் அனைவரும் துயருற்றனர். எல்லோரும் உவப்பக் கூடியவர் மலாய்நாட்டிற்குச் சென்று அங்கேயுள்ள தமிழர்களால் பெரிதும் கௌரவிக்கப் பட்டார். இரு ஆண்டுகளை மலாயாவிலும், இந்து நேசியா, யாவா முதலிய இடங்களிலும் பௌத்தமத சேவையில் கழித்து திரும்பவும் தாய்நாட்டிற்கு மீண்டார். மலாயா நாட்டிலிருந்த போது புத்தசரிதாமிர்தம் என்ற தமிழ் நூலை இயற்றினுர். இன்றும் தமிழ் நூல்களை ஆராய்வதிலும் மதசேவை செய்வதிலும் அவர் தவருது உழைத்து வருகிறுர். இத்தகைய சமரச மனப்பான்மையும், பரந்த நோக்கமும் உடையவர்க்கு ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' ஆகாமலிருக்குமா?

— ஆதவன்


# யாழ்ரதம் ரக்ஸி

பிடியுங்கள்!

**மைலுக்கு 60 சதம்**

- குறைந்த செலவில் வசதியான பிரயாணம்.
- பணிவு. உற்சாகம், நேர்மையுள்ள சாரதிகள்.
- நிதானமானசலார்-- நீங்கள் கொடுப்பது மீட்டர் காட்டுவதையே.
- வாக்குவாதம் வேண்டாம்-மீட்டரைக் கவனியுங்கள்.
- பிரயாணிகள் இன்சூர் செய்யப்பட்டுள்ளனர்.
- முக்கியமான இடங்களில் பிடிக்கலாம்

டெலிபோன் இலக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

## யாழ்ரதம் லிமிடெட்

7, கே. கே. எஸ். வீதி, : : யாழ்ப்பாணம்

# வாசகர் போட்டி-1

நாம் புதிதாக ஆரம்பித்த இப்போட்டியில் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வாசகர்கள் உற்சாகத்துடன் பங்குபற்றியுள்ளனர். வந்த விமர்சனங்கள் எல்லாம் நன்ருக எழுதப்பட்டுள்ளன. பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுப்பது கஷ்டமாகவே இருந்தது. ஆகவே நீண்ட ஆலோசனையின்பின் கீழ்க்கண்ட மூவர்க்கும் பரிசுகள் வழங்குவதெனத் தீர்மானித்துள்ளோம்.

1. திரு. ச. சிவகுமாரன், 7, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.
2. செல்வி. சி. ரோகிணி, 19/2, றெயில் ரோட், கந்தர்மடம்.
3. திரு. க. சுப்பிரமணியம், 235, கே. கே. எஸ். வீதி யாழ்ப் [பாணம்

பரிசுபெற்ற விமர்சனங்களிலிருந்து சில பகுதிகளைத் தருகின்ரும்.

'கல்யாணப்பரிசி'ல் உள்ள தேன் சொட்டும் பாடல்களைக் கேட்டால் துள்ளாத மனமும் துள்ளும். தங்கவேலுவின் ஹாஸ்யங்களைக் கேட்டுச் சிரிக்கிற சிரிப்பில், அண்ணுச்சி வயிறு புண்ணுச்சு என்று அலறவேண்டியதுதான். காண்போரைக் கவரும் காதற் காட்சிகளும். காதலிலே கன்னி தோல்வியுற்றுக் குழறும் காட்சியும், பாசத்தின் சுமையோடு பறந்து சென்றவளை நினைத்து, பாஸ்கர் குமுறும் காட்சியும், ரசிகர்களின் உள்ளங்களைக் குளிர்விக்கின்றன கருத்து மிக்க கதை, பரவசமூட்டும் பாடல்கள், நெஞ்சையள்ளும் நடிப்பு, களிப்பை ஊட்டும்காட்சிகள் முதலியவற்றைக் கொண்டது **'கல்யாணப் பரிசு'**.

ச. சிவகுமாரன்.

தியாகத்தின் சிகரம், காதலின் பெருமை, சோகத்தின் விளக்கம், ஹாஸ்யத்தின் சிறப்பு, உல்லாஸத்தின் உறைவிடம் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாய், மனஉறுதியையும் நேர்மையையும் விளக்குவதாய் அமைந்துள்ள ஒரு சமூகச் சித்திரம் **'கல்யாணப் பரிசு'**. சிறந்த இசையமைப்புடன் கூடிய, சந்தர்ப்

குக்கேற்ற வசனங்கள். உணர்ச்சி மிகுந்த சொற்கள்.

சி. ரோகிணி

பாடசாலை வாழ்வில் ஏற்படும் காதலின் தூய்மை, கடமைக்காகக் காதலைத் துறக்கும் தங்கை, பெண்ணின் வாழ்விற்காக வேலையைத் துறக்கும் மனிதப் பண்பு, தவறை உணர்ந்து, தங்கைக்காக ஏங்கும் தமக்கை உள்ளம், காதலியைப் பிரிந்து, மனைவியை இழந்து வாழ முடியாமல், வாழத்தெரியாமல் தவிக்கும் தன்மை, சமுதாயத்தின் கண்ணோட்டத்திற்கு அஞ்சி வாழ்வில் மறுமலர்ச்சி தேடும் பெண்மை இவை சிறப்பாக அமைவதோடல்லாமல், நம் நெஞ்சிலும் நிலைத்து நிற்கின்றன; எண்ணும் தோறும் நெஞ்சம் கனலாகி நீராகின்றது.

க. சுப்பிரமணியம்

## வாசகர் போட்டி: 2 -- பரிசு: 10 ரூபா

# என்னைக் கவர்ந்த நடிகர்

சென்ற ஆண்டில் வெளியான படங்களில் உங்கள் மனதைக் கவர்ந்த நடிகர் யார்? ஏன்? விபரங்களைக் பத்து வரிக்குள் எழுதியனுப்புக. தபாலுறையின் மேல் கீழேயுள்ள முகவரி வெட்டி ஒட்டப்பட வேண்டும்.

முடிவு திகதி 20-3-60

**வாசகர் போட்டி:- 2**
மே/பா கலைச்செல்வி
கந்தரோடை :: சுன்னாகம்.

நினைவூட்டுகிறோம்

மட்டக்களப்பு பாரதி கல்லூரியின் ஆசிரியர் சண்முகம் பி. ஏ. சாவித்திரி என்னும் சக ஆசிரியையுடன் நெருங்கிப் பழகுகின்றான். அவர்கள் தொடர்பில் யாரோ களங்கம் கற்பித்துவிடுகின்றார்கள் என்ற வதந்தியை ஆசிரியர் பத்மநாதன் மூலம் அறிகின்றான். மனம் கலங்கி மட்டக்களப்பை விட்டுப் புறப்பட்ட சண்முகம், அவன் பால்ய நண்பன் பரமேஸ்வரனுடன் கொழும்பிற்குச் செல்கின்றான். பரமேஸ்வரன்-ரூபமதி ஆகியோரின் தொடர்பு அவனைப் புதிய மனிதனாக்குகிறது. மட்டக்களப்பிற்குத் திரும்பிச் சென்ற சண்முகம் சாவித்திரியை அவள் வீட்டிலேயே சந்திக்கிறான். இதயங்கள் இரண்டும் இணைகின்றன. அவர்கள் போக்கில் அநியாயமாகத் தலையிடும் பத்மநாதன் மேல் சிறிது சந்தேகம் எழுகின்றது. இந்தச் சமயத்தில் ஊரிலிருந்து வந்த தந்தியொன்றைத் தொடர்ந்து அங்கு சென்ற சண்முகம் தன் தந்தையை மரணப் படுக்கையில் காண்கின்றான். கடன் பிரச்சினையும், கல்யாணப் பிரச்சினையும் அவன் மனதைக் குழப்புகின்றன, —இனி, மேலே படியுங்கள்.

## 9. இருளில் ஓர் உருவம்

நீண்ட நேரம் அமைதி நிலவியது. சண்முகமும் பரமசிவமும் ஒருவரை ஒருவர் பார்த்தபடியே இருந்தனர். சண்முகம் கூறியது நிஜமா, பொய்யா என்ற சந்தேகம் தோன்றுவதற்கிடையில், நம்புவதா வேண்டாமா என்ற பிரச்சினை கிளம்புவதற்கிடையில் அதிர்ச்சி அவரை ஆட்கொண்டுவிட்டது. ஆகவே அவர் பேசாதிருந்தார். தன் சொல்லை அவர் நம்புவாரா, மாட்டாரா என்ற திகிலில் சண்முகத்திற்கு எதுவும் பேசத் தோன்றவில்லை.

எத்தனை நேரத்திற்குத்தான் இப்படி இருப்பது? சண்முகம் மறுபடியும் தன் முடிவைத் தெட்டத் தெளிவாக வெட்ட வெளிச்சமாகச் சொன்னான்: "உங்கள் கடன் தொகைக்கும் வட்டிக்கும் பதிலாக எங்கள் வீட்டையும் வளவையும் எடுத்துக் கொள்ளுங்கள். இன்றையப் பொழுது முடிவதற்கிடையில் இரண்டையும் அறுதியாக எழுதித் தந்துவிடுகின்றோம். கடன் தொகையைப் பணமாகவே திருப்பிக் கொடுக்காததற்காக எங்களை மன்னிக்க வேண்டும்."

உறுதியும் உத்தரவாதமும் உள்ளடங்கிய அவனுடைய குரல், பரமசிவத்தின் உடலை ஊடுருவி, உள்ளத்தை உறுத்தி, சிறிது மனித உணர்ச்சியை ஊற்றெடுக்கச் செய்தது.

"தம்பி! நீ மனப்பூர்வமாகத்தான் இந்த முடிவுக்கு வந்தாயா? உன் அம்மாவுக்கு இதில் பூரண சம்மதம் உண்டா? ஒளிக்காமல் சொல்லு தம்பி".

"அதைப்பற்றி இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் செய்ய வேண்டிய கடமை இது. அதைச் செய்தே தீரவேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன்".

"உன் அப்பா உன்னிடம் முன்பு சொன்னாரோ என்னவோ தெரியாது. எனக்கு ஏன் பணம் அவசரமாகத் தேவைப்படுகின்றது என்பதையும் அவரிடம் நான் சொல்லியிருந்தேன்... எத்தனையோ தலைமுறையாக உங்கள் குடும்பம் வசித்துவரும் வீட்டை விற்பதைப் பற்றி நன்றாக யோசிக்க வேண்டும்... எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல், இரண்டு பேருக்கும்

நன்மை தரக்கூடிய முறையில், எங்கள் கொடுக்கல் வாங்கலைத் தீர்த்துக் கொள்ளலாம் தம்பி!...”

பொங்கியெழுந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டான் சண்முகம்.

“எனக்கு லாப நஷ்டக் கணக்கு தெரியாது. நான் நன்மை தீமையைப் பற்றிச் சிறிது சிந்திப்பவன். என் முடிவை மாற்ற நீங்கள் வீணாக முயற்சி எடுக்க வேண்டாம்.”

அந்தக் கருங்கல் இதயத்திலே மெதுவாக அரும்பிய கருணை மலர் இப்போது கருகிவிட்டது. பார்வதியை எப்படியாவது அவன் தலையில் கட்டியடிக்கலாம் என்ற திட்டத்தை அவனுடைய ‘ஆணவப் பேச்சு’ முறியடித்ததன் பின், அவனுடன் அன்பாகப் பேச, ஆறுதலாக உரையாட அவருக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது! அவனுடன் கதைத்து வீணடிக்கும் நேரத்தில், எத்தனையோ பேருடைய வட்டிப் பணத்தை வசூல் செய்து விடலாமே!

“இனி ஒரு நிமிஷமும் என்னால் பொறுக்க முடியாது சண்முகம். இன்றல்ல, இப்பொழுதே எல்லாவற்றையும் செய்து முடித்துவிட வேண்டும். நீ வீட்டிற்குச் சென்று, நொத்தாரிஸை அழைத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வை. நான் பின்னாலேயே வந்து விடுகின்றேன்.” பழிக்குப் பழி வாங்கும் தோரணையில் மிடுக்குடன் பேசினார் பரமசிவம்.

சண்முகம் வீட்டிற்கு வந்தபோது கண்ணீர் வடித்தபடி இருந்தாள் தாய்.

ஏழைக் குடும்பமொன்றில் பிறந்து ஏதோ ஓரளவிற்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்த அவளை, சுந்தரமூர்த்தி தானாகவே விரும்பி மணம் செய்தார். அவருடைய வாழ்வின் துணையாக மட்டுமல்ல, அந்தப் பெரிய வீட்டின் அரசியாகவும் அவள் விளங்கினாள்.

வீடு, பெரிய வீடுதான். பழைய காலத்தில் கட்டப்பட்ட நாற்சார்வீடு. விசாலமான பல அறைகள் அங்கே உண்டு. சுறுசுறுப்பு மிக்க ஒரு வேலைக்காரிக்கே, அவற்றையெல்லாம் கூட்டிக் கழுவிச் சுத்தப்படுத்த அரை நாளுக்கு மேல் ஆகும். அத்தனை பெரிய வீடு.

வீட்டின் எஜமானி என்ற நினைப்பு அவளிடம் என்றும் இருந்ததில்லை. அந்த வீட்டைக் கழுவிச் சுத்தப் படுத்துவதில், அவளுக்கு அலாதி ஆனந்தம். செய்ய வேண்டிய வேலைகள் எல்லாவற்றையும் தானே முன்னின்று முடித்து வைப்பாள். வயல் வேலைகள் இல்லாத ஓய்வு நேரங்களில், ஊருக்கு உபயோகமான பொது விஷயங்களில் சுந்தரமூர்த்தி ஈடுபட, வீட்டுடன் தொடர்புடைய சகலதையும் நிர்வகிக்கும் வீட்டரசியாக அவள் விளங்கினாள்.

அவள் அந்தவீட்டிற்கு வந்ததன் பின், சுந்தரமூர்த்தியின் மரணத்திற்கு முன், நோயென்று அங்கே படுத்தவர்கள் இல்லை. பணக் கஷ்டம் பல தடவை அவர்களைத் தளரச் செய்த போதும், கணவன்—மனைவியர்க்கிடையில், மனக்கசப்போ, சண்டையோ ஏற்பட்டது கிடையாது. சண்முகம் அவர்களுக்கு ஒரே பிள்ளை. ஆனால் அந்த ஊரிலுள்ள குழந்தைகள் பல அவளுடைய அன்பணைப்பிலே அந்த வீட்டில் வளர்ந்தார்கள். அதிக பணம் செலவழித்துக் கல்யாணம் செய்து கொள்ள முடியாதிருந்த எத்தனையோ ஏழைகளின் கல்யாண மண்டபமாக அந்தவீடு பலதடவை மாறியிருக்கின்றது.

“பாகீ! நீ வந்த வேளையோ என்னவோ, இப்போது கொஞ்சக் காலமாகத்தான் என் மனத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் நிறைந்திருக்கின்றது” என்று அடிக்கடி தன் மனைவியைப் புகழுவார் சுந்தரமூர்த்தி.

அதனாலெல்லாம் அவள் கர்வமடையவில்லை. அவளுடைய இரத்தத்தோடு ஊறிய பணிவும், அன்பும், தன்னடக்கமும் அவளை மௌனியாக்கிவிடும். அவள் செய்யும் பணிகளைக் கணவன் ஆதரிப்பதுடன் மட்டும் நில்லாது, வெளிப்படையாகவே பாராட்டி உற்சாகப்படுத்தும் நற்பண்பு அவள் தொண்டின் உயிர் நாடியாக விளங்கியது.

அந்த வீடு அவளுக்கு வாழ்வளித்தது; அவள் அந்த வீட்டிற்கு சோபையளித்தாள்.

அத்தகைய அருமையான வீட்டை, ஆகிவந்த வீட்டை, நாற்பது வருடங்களுக்கு மேல் அவள் ஆட்சி செய்த வீட்டை விட்டுப் பிரிந்து அவள் வேறெங்கு செல்வது?

"அம்மா" சண்முகம் குரல் கொடுத்தான்.

கண்களைத் துடைத்துக் கொண்டாள் பாகீரதி. "தம்பி! இந்த வீட்டை நீ எழுதிக் கொடுத்து விடத்தான் போகின்றாயா?"

"வேறே வழி இல்லை அம்மா. கடவுள் கண் திறந்தால், இரண்டொரு வருடங்களில் இதே வீட்டை மறுபடியும் விலைக்கு வாங்கிவிடலாம். நான் உழைத்து பணத்தைச் சேமித்து, இந்த வீட்டை வாங்கி உன்னிடம் கொடுப்பேனம்மா!"

"இந்தக் கிழவிக்காக இனி நீ கவலைப்பட வேண்டாமப்பா! ஏதோ கொஞ்ச நாளைக்குத்தான் நான் உயிருடனிருப்பேன். ஆனால், சொந்த வீடு என்று சொல்லிக்கொள்ள ஒன்றுமில்லாமல், நீ நடுத்தெருவில் அலையப்போகின்றாயே என்பதுதான் எனக்குக் கவலை, தம்பி!" பாகீரதி நீண்ட பெருமூச்சு விட்டாள்.

நம்பிக்கையற்ற, பயங்கரமான ஒரு எதிர்காலத்தைப் பற்றிச் சண்முகம் சிறிதும் எண்ணிப்பார்க்கவில்லை. இப்பொழுது, அவனுடைய தாய் அதைச் சுட்டிப் பேசுகின்றாள்! சண்முகத்தின் மனம் இலேசாக நடுங்கியது. பொங்கிய கண்ணீரைத் துடைத்தபடி, பெற்ற தாயை நிமிர்ந்து பார்த்தான்.

அவள் அங்கிருந்து மெல்ல நகர்ந்தாள். தாயைத் தொடர்ந்து மௌனமாகச் சென்றான் சண்முகம். அவளுடைய ஒவ்வொரு செய்கையும் அவன் மனத்தைப் பலமாகத் தாக்கத் தொடங்கியது.

ஒவ்வொரு அறையினுள்ளும் சென்றாள் பாகீரதி. கதவுகளை அன்புடன் தடவிக் கொடுத்துக் கண்ணீர் சிந்தினாள். சுவர்களுடன் தன் கன்னத்தைப் பொருத்திச் சொந்தம் கொண்டாடினாள்; தண்ணென்றிருந்த ஒரு மண் திண்ணையில் வெறுமனே கிடந்து, உருண்டு புரண்டு உறவு கொண்டாடினாள்.

இந்தக் கண்ணருவிக் காட்சிகளைக் காணச் சகியாத சண்முகம், "அம்மா! நீங்கள் கவலைப்படவேண்டாம். உங்களுடைய விருப்பத்திற்கு மாறாக நான் எதுவும் செய்ய மாட்டேன். இந்த வீட்டை நான் எழுதிக் கொடுக்கவில்லை; விற்கவுமில்லை" என்றான் நாத் தழு தழுக்க.

சண்முகம் தன் பின்னால் வந்திருக்கின்றான் என்பது இப்போதுதான் பாகீரதிக்குத் தெரிந்தது. அவளுடைய பைத்தியக்காரத் தனமான செயல்களையெல்லாம் அவன் கவனித்து விட்டானா?

துக்கத்திலும் வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது. அவனையே பார்த்தபடி சிறிது நேரம் நின்று விட்டுப் பிறகு சொன்னாள். "நீ நன்றாக வாழவேண்டும் என்பதுதான் என் விருப்பம் தம்பி. வீட்டை விற்றுக் கடனை அடைத்து விடு. வீடு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. எப்படியாவது நீ நிம்மதியாக வாழ்ந்தால் போதும். அந்தப் பார்வதியுடன் வாழ்

நாள் முழுவதும் கஷ்டப்படுவதைவிட வீடில்லாமல் இருப்பது மேல்”

வெளியே பரமசிவத்தின் குரல் கேட்டது. ஆசிரியர் கந்தசாமியும் நொத்தாரிஸ் இராமநாதனும் கூடவே இருந்தார்கள்.

வீடு கைமாறியது. தற்காலிகமாக, பாகீரதி ஆசிரியர் கந்தசாமியின் வீட்டில் குடியேறினாள். பொருட்கள் இடம் மாறின. சண்முகம் ரயிலேறினான்.

நாள் செய்வது நல்லவர் செய்யார். சண்முகத்தைப் பொறுத்தவரை, இது அணுவளவும் பிசகாமல் நடந்தது. நாள் செல்லச் செல்ல, அவனிடம் பழைய உற்சாகம் திரும்பி வரத் தொடங்கியது. தந்தையை இழந்துவிட்ட கவலை, வீட்டை விற்றுவிட்ட கவலை, தாயைத் தனியாக தவிக்கவிட்ட கவலை ஆகிய எல்லாமே படிப்படியாகக் குறைந்து மறைந்து விட்டன. சாவித்திரி இருக்கின்ற ஊருக்கு வந்ததன் பின்பும் அவன் கவலையால் வாடிக் கொண்டிருக்க முடியுமா?

பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அவனிடம் அனுதாபம் தெரிவிக்க வந்தனர். அவர்களுக்கெல்லாம் அவனே ஆறுதல்கூறி அனுப்பிக் கொண்டிருந்தான்.

எல்லோரும் சென்றபின், தனியாக இருந்து தன் எதிர்காலத்தைப் பற்றிச் சிறிது சிந்தித்தான். தந்தை இறந்தபின், முதன் முதலாக இப்போதுதான் அவனுக்கு அமைதி கிடைத்தது; ஆறுதல் கிடைத்தது; பதற்றப்படாமல் எதையும் சிந்திக்கும் திறமை கிடைத்தது; தனிமை கிடைத்தது.

இந்த ஒருமாத காலத்திற்குள் எத்தனை பயங்கர நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன! எத்தனை இன்னல்கள் அவனைத் தாக்கிவிட்டன! இதயம் வெடிக்க எத்தனை தடவை அவன் அழுதுவிட்டான்.

இருந்தும், அவன் பைத்தியக்காரனாகி விடவில்லை; தன்னை மறந்து விடவில்லை; தன் நிலையை இழந்து விடவில்லை.

‘இதற்கெல்லாம் காரணம்...?’

கேள்வியைத் தடுத்து விரட்டி விட்டுப் பதில் குதித்துக் கும்மாளமிட்டது.

‘சாவித்திரி!’

ஆம்! சாவித்திரிதான் காரணம். உயிருக்குயிரான அப்பாவைப் பறிகொடுத்து அவன் அலறியபொழுது, அவனுடைய உள்ளத்திலிருந்த சாவித்திரிதான் கலங்க வேண்டாமெனக் கண்ணீரைத் துடைத்து விட்டவள். கடன், கல்யாணமா என்ற கஷ்டமான பிரச்சினை தோன்றிய பொழுது இதே சாவித்திரிதான் ‘கவலைப்படாதீர்கள், கைப்பிடிக்க நான் வாறேன்’ என்று அவன் காதிற்குள் ஓதிக் கருத்தில் கலந்து விட்டவள்! ஆண்டாண்டு காலமாக அவர்களை வாழவைத்த அந்த வீட்டை விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபொழுது, இதே சாவித்திரிதான் ‘தயங்கவேண்டாம், தங்குமிடம் தருகின்றேன்’ என்று தெம்பூட்டியவள்.

சாவித்திரி அவனை ஆட்கொண்டிராவிட்டால், இவ்வளவு சங்கடங்களையும் அவனால் சமாளித்திருக்க முடியுமா? தன்னை அறியாமலே, அவள் எத்தனை நன்மைகள் அவனுக்குச் செய்திருக்கின்றாள்!

உயிரோடு உறவாடும் அந்த உத்தமியுடன் உரையாட வேண்டுமென அவன் உள்ளம் துடித்தது. முன்பொருநாள் சாவித்திரி குறிப்பிட்ட ‘முக்கிய விஷய’ மும் நினைவிற்கு வந்தது.

அறையைப் பூட்டிக்கொண்டு அவசர அவசரமாக அவள் வீட்டிற்குச் சென்றான்.

“மங்கள பவனம்” அன்று மங்கிப்போயிருந்தது அங்கு வீசிய மென்காற்றில், மல்லிகையின் மணம் பவனி வரவில்லை; மனதிற்கினிய கீதம் கலந்து ஒலிக்கவில்லை. ஆளரவமற்ற அமைதி அங்கே அடைந்து கிடந்தது.

மூளையைக் குழப்பிக்கொண்ட சண்முகம் முன் கதவை மெதுவாகத் தட்டினான். ராதா கதவைத் திறந்தாள். ஆச்சரியத்தால், கண்களை அகல விரித்து அவனைப் பார்த்துவிட்டு உள்ளே ஓடினாள்.

“அக்கா,... மாஸ்டர் வந்திருக்கிறாரக்கா...” என்று அவள் கூவியது, அடிவீட்டிலிருந்து கேட்டது.

சாவித்திரியும் தாயும் ஒரே சமயத்தில் வெளியே வந்தார்கள்.

“உங்கள் வீடா இது?... உங்களைப் பார்த்தபின்பும் என் சந்தேகம் தீரவில்லை” என்றான் சண்முகம்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். சிறிது நேரம் கழித்துத் தாய் சொன்னாள்: “உங்கள் தகப்பனாரின் மரணத்திற்குப் பின் சாவித்திரியே மாறிவிட்டாள். தன்னுடைய அறைக்குள்ளே அவள் அடைந்து கிடந்தால், வீட்டைக் கவனித்து அலங்கரிக்க என்னால் முடியுமா? ராதாவால்தான் முடியுமா?”

‘இதையேன் சொன்னாய்’ என்பதைப்போல் சாவித்திரி தாயைப் பார்த்து விழித்தாள்.

சண்முகத்தின் குரல் அடங்கியது. தந்தையை இழந்த துக்கம் மறுபடியும் எழுந்தது. கண்கள் கலங்கின. சாவித்திரியும், தாயும் கண்ணீர் சிந்தினர். ஒப்பாரி இல்லையே தவிர, ‘சாவீட்டுச் சூழ்நிலை’ ஒரு கணப்பொழுதில் அங்கே உருவாகிவிட்டது.

## கழுத்துறை நத்தை

இது தாவரங்களுக்கு மிகவும் தீங்கு செய்யும் பிராணி. தென்னிலங்கையில் கழுத்துறைப் பகுதியில் தாவரங்களை அழித்துத் தொல்லை உண்டு பண்ணிவந்தது. இந்த நத்தைகளின் பிறப்பிடம் வங்காளம். இவற்றை அழித்தற்காக அரசாங்கம் முயற்சி செய்து கடலில் வெகுதொலைவில் தொலைத்தது. இன்று அவை இந்தியக் கரையில் பாலக்காடு பகுதியில் தொல்லை கொடுத்து வருகின்றன.

—சுந்தர், ஸ்கந்தா.

தந்தையின் நோயைப் பற்றியும் மரணத்தைப் பற்றியும் சாவித்திரியின் தாய் கேட்டாள். எல்லா விபரங்களையும் சண்முகம் கூறினான்.

“நேரடியாக வந்து உங்கள் துக்கத்தில் கலந்துகொள்ள முடியவில்லையே என்று எங்களுக்கு வருத்தம்” முதன் முதலாக இப்போதுதான் பேசினாள் சாவித்திரி.

“பரவாயில்லை, சாவித்திரி. வரவேண்டுமென்று நீங்கள் நினைத்ததே போதும்.”

சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை.

“உங்களிடம் ஆறுதல்பெற வந்தேன். இப்பொழுது உங்களுக்கே ஆறுதல் கூற வைத்துவிட்டீர்கள்” என்று அந்த அமைதியைக் குலைத்தான் சண்முகம்.

சண்முகத்தைப் பார்த்து புன்முறுவல் பூத்த சாவித்திரி, பழையபடி கலகலப்புடன் பேசத் தொடங்கினாள். இங்கிதமறிந்த நாகம்மாள்

அவ்விடத்தை விட்டகன்ருள். விளக் கேற்றி வைத்த ராதையும் அதிக நேரம் அங்கு நிற்கவில்லே. கொண்டு வந்த தேநீரை சண்முகத்திடமும், மல்லிகைப் பூக்களேச் சாவித்திரியிட மும் கொடுத்துவிட்டு அவளும் ஓடி விட்டாள்.

அறை ஒளி பெற்றது; மணம் பெற்றது; உயிர் பெற்றது. ஒருவரை ஒருவர் விழுங்குவதைப் போல் பார்த் துக்கொண்டிருந்தனர்.

நேரம் ஓடியது. "தேநீர் ஆறிப் போகும்" என்று நினைவூட்டினுள் சாவித்திரி.

"சாப்பாட்டை நினைவூட்டுவதற் கே எனக்கு ஒருத்தி தேவைப்படுகின் ருளே" என்று சொல்லியபடி தேநீர்க் கோப்பையை எடுத்தான் சண்முகம்.

வெட்கத்தோடு அவனே ஓரக் கண்ணுல் பார்த்தாள் அவள்.

தேநீர் உள்ளே போக, உள்ளி ருந்த சில விஷயங்கள் வெளியே வந்தன.

"சாவித்திரி! 'ஒரு முக்கிய விஷ யத்தைப் பற்றிப் பேசவேண்டும்' என்று என்னே அனுப்பி வைத்தாய். அதற்குப் பிறகு இன்றுதான் நான்

> **அமீபா**
>
> ஒருயிரணுப்பிராணி. இது 35 சென்ரிக் கிரேட் டிகிறி உஷ்ணமுள்ள நீரில் வாழும் என்பதுதான் இதுவரை நாம் அறிந்தது. அது 110 சென்ரிக்கிரேட் டிகிறி உஷ்ணமுள்ள நீரிலும் சீவிக்கும் வன்மையுடையது என்று ஆராய்ந்து முடிவுகட்டியுள்ளனர் இப்போது.
>
> — சுந்தர் ஸ்கந்தா

வருகின்றேன். அதைப் பற்றிப் பேசு வதற்கு முன், நான் சில விஷயங் களேக் கூற விரும்புகின்றேன்".

'சரி' என்பதற்கடையாளமாகத் தலேயாட்டினுள் சாவித்திரி.

"என்னிடமிருந்து நீ என்ன எதிர்பார்க்கின்ருய்?"

சாவித்திரியால் பதில் சொல்ல முடியவில்லே. இந்த நேரத்தில் இது என்ன கேள்வி? திகைப்புடன் சண் முகத்தை நோக்கிய சாவித்திரி, அவனிடம் திருப்பி ஒரு கேள்வி கேட்டாள்.

"என்னிடமிருந்து என்ன பதி லே எதிர்பார்க்கிறீர்கள்?"

கேள்வியைக் கேட்டுவிட்டு அவள் சிரித்தாள்.

"சிரிக்கும் விஷயமல்ல இது சாவித்திரி! நான் கொஞ்சம் 'சீரி யஸா' கவே கேட்கின்றேன். உன் உண்மையான மன விருப்பம் எனக் குத் தெரியவேண்டும்".

"நான் எதையும் எதிர்பார்க்க வில்லே. எனக்கு நீங்கள்தான் வே ண்டும். உங்கள் தூய அன்புதான் வேண்டும்". தீர்மானமான குரலில் அவள் கூறினுள்.

"நான் பண வசதியற்றவன். பட்டிக்காட்டு வாசி. பட்டங்களும் அதிகம் பெறவில்லே. கடன் தொல்லே காரணமாக இருந்த வீட்டையும் இப்போது விற்றுவிட்டேன்..."

"போதும் சண்முகம்! போதும். என் அன்பில் உங்களுக்குத் திடீ ரென்று ஏன் சந்தேகம் வந்துவிட் டது என்பதுதான் எனக்குத் தெரிய வில்லே...". சாவித்திரியின் குரல் அழு தது. விம்மலுடன் அவள் தலேயைக் குனிந்தாள்.

“சாவித்திரி! உன் மனத்தைப் புண்படுத்த விரும்பவில்லை. அன்பு மயக்கத்தில், உண்மையான நிலை மறைந்துவிடும். எதையோவெல்லாம் எதிர்பார்த்து, கடைசியில் நீ ஏமாந்துவிடக்கூடாது. நான் உண்மையிலேயே ஏழை; பரம ஏழை. ஏதாவது காரணங்களால் நான் ஆசிரியத் தொழிலிலிருந்து விலகினேனானல் நடுத்தெருவில் நின்று நாயாக அலையவேண்டும்.”

“உங்களை முதலிற் கண்ட பொழுது தற்செயலாகக் கதைத்த பொழுது ஏன் என்னையே மறந்தேன் என்பது எனக்குத் தெரியாது. அன்றே, உங்களுக்காக நான் வாழவேண்டுமென்று தீர்மானித்து விட்டேன். நீங்கள் ஏழையாக இருந்தாலென்ன, பணக்காரராயிருந்தாலென்ன, எனக்கு அக்கறையில்லை. அன்று கொண்ட அன்பு இன்றுவரைக்கும் அப்படியே இருந்து வருகின்றது. இனி என்றுமே அப்படி இருக்கும். இதை மட்டும் நம்புங்கள்” என்று சொல்லி, சண்முகத்தின் உள்ளங்கையைப் பற்றி உறுதியளித்தாள்.

பற்றிய கையை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டான் சண்முகம்.

“சாவித்திரி! நான் பாக்கியசாலி. உண்மையிலேயேபாக்கியசாலி. என்னைவிடப் பாக்கியசாலிகள் இந்த உலகத்திலேயே இல்லை. சாவித்திரி! வீட்டை விற்க நினைத்த பொழுது, உன் நினைவுதான் என்னைச் சற்றுத் தடுமாறச் செய்தது. என்றாலும், என் செயலை நீ ஆதரிப்பாய் என்று நம்பினேன். என் நம்பிக்கையைக் காப்பாற்றிவிட்டாய் சாவித்திரி!” நன்றிப் பெருக்குடன் அவளைத் தன் கண்களால் தழுவிக்கொண்டான்.

உணர்ச்சி அலைகளிலிருந்து விடுபட்ட சாவித்திரி. “இனி என் முக்கிய விஷயத்தைப் பற்றிச் சொல்லட்டுமா?” என்று கேட்டாள்.

“தாராளமாக. நீ சொல்வதைக் கேட்கத்தானே கடவுள் எனக்கு இரண்டு காதுகளைப் படைத்தார்” என்று கூறி உற்சாகப்படுத்தினான்.

அவனை ஆராய்வதுபோல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள் சாவித்திரி.

அவசர அவசரமாக வெளிக்கதவில் யாரோ தட்டினார்கள்.

சாவித்திரி பின்தொடர, சண்முகம் எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

அங்கே ஒருவருமில்லை.

சற்று தூரத்தில் ஓருருவம் இருளில் சென்று மறைந்தது. சண்முகமும் சாவித்திரியும் கலவரத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றனர்.

(தொடரும்)


## பிழை திருத்தம்

‘மலைநாட்டில் பாரதி’ என்ற கட்டுரையில் ‘சோற்றுக்காகச் சேர்ந்தவர்கள்’ என்பது ‘சோற்றுக்காகச் சோர்ந்தவர்கள்’ என்று இருக்க வேண்டும்.

—ஆர்.



# விவேகானந்த நாதம்



அமெரிக்கா ஒரு நூதன சக்தி இயைந்த நாடு. கொலம்பஸ் முதல் முதல் அமெரிக்காவை அடைந்தபோது, கற்கால வாழ்வு வாழ்ந்த அமெரிக்க சுதேசிகள் திடீரென இரும்புக்கால நாகரிக மக்களாக மாறினர்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்க நகரமாகிய சிக்காக்கோவில் எழுப்பிய இந்து மத நாத வெள்ளத்திலே மூழ்கிய அமெரிக்கர் இன்று உலகத்திற்கே சமயதத்துவம் போதிப்பதில் இந்து மதத்தினரையும் விஞ்சிவிட்டனர். இந்து மதம் அங்கே புயல் வேகத்தில் மறுமலர்ச்சியடைகிறது.

விவேகானந்த அடிகள் வித்திட்ட இந்து மதம் ரொக்கி மலைத் தொடரையுந்தாண்டி கலிவோர்ணியாவில் வேரூன்றிப் பாரிய விருட்சமாக வளர்கிறது.

இதோ இவர் தாம் இந்து மக கலாச்சாரம், பண்பாடு இவற்றில் ஊறித்திளைத்து சுப்பிரமணியம் என்ற இந்து நாமத்துடன் கிருஷ்ணாச்சிரமம் (Krishna Chappel) என்னும் பெரியதோர் ஆச்சிரமத்தின் ஸ்தாபகராகவும் குருவாகவும் விளங்குகிறார். இவரது வரலாறே தனித்துவம் வாய்ந்ததும் ஆர்வம் நிறைந்ததும் ஆகும்.

“ஹான்சன்” என்பது இவரது இயற்பெயர், ஒருகாலம் உலகப்பிரசித்திபெற்ற நாட்டியக்காரர். ஹொலிவுட்டில் நாட்டிய நிர்வாகியாகக் கடமை புரிந்த பொழுதிலும் மாமிச உணவோ மதுவர்க்கமோ அறியாத தூய்மையினர். பிரமச்சரிய வாழ்க்கையினர் விவேகா

னந்தரது நாத வாடை இவர் மேல் வீசியதன் பலனாய், புண்ணிய பூமியாகிய இந்தியாவிற்கும் இலங்கைக்கும் யாத்திரை புரிந்தவர். இந்த யாத்திரையின் சரித்திரமே "கிருஷ்ண சப்பெல்" என்ற யோகாஸ்சிரமம். இந்த ஆஸ்ரமத்திலே, ஆத்ம விசாரணையிலே ஈடுபாடுள்ள பல அமெரிக்கப்பெரியார்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆஸ்ரமத்தின் பணிகளுள் பெரும்பணியாக அமைந்து, உலக அங்கத்தவர்களுக்கு கடித மூலம் யோக ஞானத்தையும் இறைவழிபாட்டையும் பரப்புதலே The New Age Applied Yoga Correspondence Course.

இலங்கையிலே கொழும்பில் இவர் தங்கியிருந்த காலத்திலே, அளவெட்டி பெரியார் ஒருவரது தொடர்பு ஏற்பட்டது. அதன் பலனாய் யாழ்ப்பாணத்து தவமுனிவரது நல்லாசியும் கிடைத்தது. அளவெட்டி கும்பளாவளை விநாயகப் பெருமானை அர்ச்சிக்கும் பொழுது, தனது "ஹான்ஸன்" என்ற பெயரை சுப்பிரமணியம் என்று மாற்றி, (I am a Suppar Man என்று காஸ்யமாகவும் தத்துவம் ஆகவும் கூறினார்) இதே பெயரோடு (Sri Subramaniya) வாழ்கிறார். சிவன், உமை திருமால் முருகன் ஆதிய தெய்வத் தன்மைகளை உணர்ந்து, அவ்வடிவங்களை ஒன்றித்து தமக்கென ஒரு தனித்துவ நிலையில் இந்து மத போதனை புரிந்து வருகிறார். திரு அண்ணாமலை, பழனிமலை, கதிரமலை, போன்ற புனித மலை வழிபாடும் ஆங்கு நிகழ்ந்து வருகிறது. உலகத்துப்புண்ணிய க்ஷேத்திர தானங்களிலிருந்து விதி முறையாகக் கற்களை வரவழைத்து, அந்தப் பரிசுத்த கற்களால் தேவப்பிரதிட்டை பண்ணி வழிபாடு இயற்றி வருகிறார்.

"யான் பெற்ற இன்பம் இவ்வையகமெல்லாம் பெறுக" என்று பரந்த தொருபணியாற்றி வரும் இத்தவயோகியின் பிரசாதமான கடிதங்களைப் பெற விரும்புவோர் பின் வரும் முகவரிக்கு விண்ணப்பிக்குக.

The World Fellowship of Yoga,
3575, Sacramento Street,
Sanfrancisco 18,
Calif, U. S. A.


உலகம் பரவி வரும்இந்து மதமும் இப்பெரியாரின் சேவையும் வாழ்க.

சி. பொன்னம்பலம்.

கலைச்செல்வி விற்பனையாளர்
திரு. க. நாகராசா
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ் முல்லைத்தீவு

# மரகதம்

பக்ஷிராஜா



மரகதம் என்னும் பசுமையான பெயர் போதாதென்று அடைப்புக்குள்ளே ‘கருங்குயில் குன்றத்துக் கொலை’ என்று பயங்கரப் பெயரொன்று சூட்டியிருக்கிறார்கள்.

நீர்வளம் நிலவளம் நிறைந்து கருங்குயில் குன்றம் என்ற ஜமின் புரியிலே மாரமாத்தாண்டன் என்ற ஓர் இளைய இராசரும் அவருக்குத் தமையனாரான சொத்தி அரசரும் ஆட்சி புரியும் பொழுது பெரியவரை யாரோ சதிக்காரர்கள் படுகொலை செய்ய, பழி சின்னவர் மீது விழ தனது சிறுமி மரகதத்துடன் அவர் சிங்களத் தீவிலே (இலங்கையில்) தஞ்சம் புக.......

கதையமைப்பு மர்மக் கொலையாக இருந்த போதிலும் விறுவிறுப்பைக் காணோம். இடைவேளை வரை படத்தின் சுவை குன்றிக் கொண்டே போகின்றது. யுவராஜ உடை அணிகிறார் சிவாஜி கணேசன். காதல் உரையாடல்களைக் கவர்ச்சியுடன் செய்வதில் தனக்கே உரிய பாணியைக் காட்டியிருக்கிறார். உளவு பார்க்கும் சமையல்காரவேடம் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கின்றது. சில இடங்களில் மிகவும் பாராட்டத்தக்க விதமாக நடித்திருக்கின்றார்.

சிங்கள ஆடை பத்மினிக்கு மிகவும் பொருத்தம். சில இடங்களில் பத்மினியின் நடிப்பு பிரமாதம். பாலச்சந்தர் (மாரமாத்தாண்டர்) பத்மினியின் (மரகதம்) தந்தையாகவருகின்றார். தன் பெண்ணிடம் சரித்திரத்தை விவரிக்கும் கட்டத்தில் அவர் நடிப்பு பறவாயில்லை.

திகலமாத்தாண்டன் பாலையா! பெயர் பயமுறுத்துகிற அளவுக்கு நடிப்போ தோற்றமோ அச்சுறுத்தவில்லை. பெரும்பாலும் கோமாளிக் கூத்தாக விட்டது. துரைராஜாவின் நடிப்பு பறவாயில்லை. நடிப்புடன்

கோமாளிக் கூத்தையும் காண முடிகின்றது. பாலையாவிடம் வாதாடும் பொழுது பாலையாவையும் மிஞ்சிவிடுகிறார்.

சந்தியா தனக்குக் கொடுக்கப்பட்ட பாகத்தை மிகவும் திறம் பட நடித்திருக்கின்றார்.

இடைவேளைக்குப்பின் சந்திரபாபு தோன்றுகிறார். இருந்தாலும் அவர் ஹாஸ்யத்துக்கு மதிப்புண்டு. பட்லர் உடையில் வெள்ளைத்துரையுடன் சீமைக்குச் செல்லப்போகும் பிரதாபத்தை 'பாபு பாணியில்' நடிகர் திலகத்துக்கு அளந்த வண்ணம் தோன்றுகிறார் ஆசாமி. திரும்பி வந்த எசமானைப் பிசாசு என்று எண்ணிக் கொண்டு அவர் செய்யும் ரகளை தியேட்டரையே அதிரச் செய்கின்றது. பாபுவினுடைய "குங்கும குங்கும" என்ற பாட்டைத்தவிர மற்றைய பாட்டுக்கள் மோசம். ஒலிப்பதிவு காட்சி ஜோடனைகள் பறவாயில்லை. திரி பெரிது வெடி சிறிது. இருந்தாலும் பார்த்து மகிழக் கூடிய படம் மரகதம்.

**தியாகன்**

---


ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பாராட்டப்பட்ட

**அருமையான புத்தகங்கள்**

சுண்டிக்குழி ஆசிரியர் ஆசீர்வாதம்

அவர்களால் இயற்றப் பட்டவை

**படிமுறைக்கணிதம்:-** 2ம் வகுப்பு துவக்கம்

**8**-ம் வகுப்பு வரை தனித்தனிப் புத்தகங்கள்

**பயிலுந் தமிழ்:-** இரண்டு பாகங்கள்

**இலக்கண விளக்கமும் பயிற்சியும்**

**வியாபாரம் செய்வோருக்கு 20 வீதம் கழிவு உண்டு**

# ஆசீர்வாத அச்சகம்

32, கண்டி வீதி. யாழ்ப்பாணம்.

என்றும் எவர்க்கும்

அழியாத அழகு
சுந்தரத் தோற்றம்
பூரண மனத்திருப்தி

அனைத்தும் ஒருங்கே தருமிடம்

ஞானம்ஸ் ஸ்ருடியோ

புதுமை நிறைந்த
போட்டோக் கலைப்பொருள்கள் யாவும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

17, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

ஜொலிக்கும் வைரங்கள்

அழகிற் சிறந்த ஆபரணங்கள்

இவைகட்கு எம்மிடம் வாருங்கள்!

நவநாகரிக டிசைன்களில்

நகைகள் குறித்த காலத்தில்

ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்

பிரகாசா ஆபரண மாளிகை,

Prop: S. ஞானப்பிரகாசம்

83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# விரைவில் வெளிவருகின்றது!

# கவிதை மலர்கள்

நித்திலத் தீவின் முத்துக் குவியல்

இலங்கையிலுள்ள தலைசிறந்த தமிழ்க் கவிஞர்களின் மிகச் சிறந்த கவிதைகளின் தொகுப்பு.

இலங்கையிலிருந்து வெளியாகும் முதலாவது கவிதைத் தொகுதி இதுவே!

விபரங்கள் வேண்டுவோர் எம்முடன் தொடர்பு கொள்க.

## கலைச் செல்வி

யாழ்-தமிழ் இலக்கிய மன்றம்,

கந்தரோடை : : சுன்னுகம்.

# "போட்டோ" கலை உலகில்

## ஓர் அற்புதம்

என்றும் மறக்கமுடியாத வைபவங்களில்,

உங்கள் உருவங்களை
இயற்கை வர்ணங்களில்

உருவாக்கித்தருகிறோம்

வடமாகாணத்தில்

சுன்னாகம் **பிறின்ஸ்** ஸ்தாபனத்தாரால்

மட்டுமே இந்தக்கலை உருவாக்கப்படுகிறது

## Kodak - Extachrome

கொடாக்-எக்ஸ்ராகுரோம்
டெக்னிக் கலர் !!!

நினைவிருக்கட்டும்

சுன்னாகம் பிறின்ஸ்